# மாற்றுத்திறனாளிகள் தொடர்பான கட்டுரைகள்

## 01. சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் டிசம்பர்-3



உலகில் வாழும் மக்கள் சகல உரிமைகளோடும், கௌரவத்தோடும் வாழ்வதற்கு உரித்துடையவர்கள் என்ற எண்ணக்கருவை முன்நிறுத்தும் வகையில் ஐக்கியநாடுகள் சபை சில தினங்களை பிரகடனப்படுத்தி உள்ளது. இத்தினங்கள் ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்பட்டு வரும் தினங்களுள் மகளிர் தினம், சூழல்பாதுகாப்பு தினம், முதியோர் தினம். சிறுவர் தினம், மது ஒழிப்பு தினம் ஆகியன சிலவாகும். குறிப்பிடப்பட்ட அத்தினங்களில் குறித்த அவ்விடயத்தை மக்களுக்கு தெளிவுபடுத்தி உலகில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது இத்தினங்களை கொண்டாடுவதன் நோக்கமாகும். இந்த வகையில் அமைந்ததே சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் ஆகும்.

உலக சனத்தொகையில் சுமார் 15 வீதமானவர்கள் ஏதோ ஒரு வகையில் உள ரீதியாகவோ அல்லது உடல் ரீதியாவோ பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுகின்றார்கள் என மதிப்பீடுகள் கூறுகின்றன. அதாவது உலகத்தின் மிகப்பெரிய ‘‘சிறுபாண்மையினர்’’ என்ற வரையறையில் இவர்கள் உள்ளனர். சமூகத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் இவர்களுக்கு தடைகள் காணப்படுகின்றன. இவர்கள் எதிர்நோக்கும் இடையூறுகளாக வாழுமிடத்தின் தன்மைகள், அவர்கள் ஏனையவர்களுடன் ஏற்படுத்தும் தொடர்பாடல்கள், சில நாடுகளின் சட்ட திட்டங்கள், சமூகத்தின் மனோபாவம், பாரபட்சம் போன்றவற்றை குறிப்பிடலாம். இதன் பெறுபேறு யாதெனில் இப்பெரிய சிறுபாண்மையினர் கல்வி, வேலைவாய்ப்பு, உடல் ஆரோக்கியம் மற்றும் சுகாதார கவனிப்பு, போக்குவரத்து, அரசியல், நீதிநிலை ஆகியவற்றில் பாரபட்சப்படுத்தப்படும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், இந்தத் தடைகள் நீக்கப்பட்டு முழுமையாக இவர்கள் சமுதாயத்துடன் இணைக்கப்படல் வேண்டும். அத்துடன் இவர்களது திறமைகள் வெளிக்கொணரப்படுவதுடன் இவர்களை உலகத்தின் பங்காளர்களாக மாற்றுவதனால் தான் இவர்கள் மட்டுமல்லாது இவர்களுடன் சேர்ந்த சமூகமும் ஏன் நாடும் வளர்ச்சி காணும் இந்நிலையினை சில நாடுகளில் உள்ள நடைமுறைகளும், அனுபவங்களும் எடுத்துக்காட்டுகின்றன. எனவே இத்தகைய இடையூறுகள், தடைகள் இவர்களுக்கு இருக்கும் எனின், அது

நிச்சயமாக அவர்கள் சர்ந்த சமூகத்திற்கும் அபிவிருத்திக்கும் பாதிப்பை விளைவிப்பதாகவே அமையும். எமக்கு அல்லது எமது குடும்பத்தில் ஒருவருக்கு இந்நிலை ஏற்படுமாயின் வாழ்நாள் முழுவதும் இன்னொருவரில் தங்கி இருக்க நேரிடும். இந்நிலையினை மாற்றி அறிவு பூர்வமாக சிந்தித்தால் இன்றைய உலக வளர்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் என்று சொல்வதற்கு சிறிய சிறுபான்மையினரே இருப்பர்.

உலகில் வாழும் மாற்றுத்திறனாளிகள் சாதாரண மனிதர்களைப் போல் சகல உரிமைகளுடனும் வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கோடு முதன் முதலாக 1981ம் ஆண்டு ''சர்வதேச மாற்றுத்திறனாளிகள் ஆண்டு'' என ஐ.நா பிரகடனம் செய்தது. உலக நாடுகளில் அரசாங்கங்கள் மாற்றுத்திறனுள்ள மக்களின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்வதற்கு வழிவகைகளைக் செய்ய வேண்டும் என்றும் ஐ.நா வேண்டுகோள் விடுத்தது. இதற்கென 1983 முதல் 1992 வரை ஐ.நா ஒரு தசாப்த காலத்தை மாற்றுத்திறனாளின் விருத்தி செயற்பாடுகளுக்காக ஒதுக்கி பணிகளை ஒருமுகப்படுத்தியது. இத் தசாப்தம் முடிவுக்கு வர இருக்கும் நிலையில் 1992ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14ம் திகதி ஐ.நா பொதுச்சபையால் டிசம்பர் மாதம் 3ம் திகதி சர்வதேச மாற்றுத்திறனாளிகளின் தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அத்துடன் அதே ஆண்டான 1992 டிசம்பர் 3ம் திகதி ஐ.நா. சபையாலும் ஏனைய உலக நாடுகளாலும் மாற்றுத்திறனாளிகள் தினம் அனுட்டிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 03இல் இத்தினம் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினமாக கொண்டாப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் ஐ.நா வின் பிரகடனத்தில் இத்தினத்தை “International Day Of Disable Persons என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இது 2007 டிசம்பர் 18ம் திகதியன்று International Day Of Persons With Disabilities” என மாற்றப்பட்டது. ஏனெனில் அறிவியல் வளர்ச்சி காரணமாக. மக்களின் வாழ்க்கைத்தரமும், வாழ்வின் துணைக்கருவிகளும் முன்னேற்றம் பெற்றன. இதனால் இந்நிலையில் உள்ள மக்களும் ஏனையவர்களைப் போல சகல விடயங்களையும் செய்யக்கூடிய நிலைக்கு வந்தமையாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் இம்மக்களின் வாழ்க்கை முறையை உயர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. “Disable” என்ற பதம் நிரந்தரமாக இயலாத தன்மையைக் குறிப்பதாகும். ஆனால் இது வெல்லப்படக்கூடிய ஒன்று என உணரப்பட்டபோது இந்தப்பதமும் மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. “Disability'' என்பது குறிப்பிட்ட சில விடயங்களைச் செய்வதற்குப் பயிற்சியின்மை என்ற கருத்தை ஏற்படுத்தியது. விசேட தேவையுடையோர், மாற்றுத்திறனாளிகள் போன்ற பதங்களை பயன்படுத்துவது தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் இன்று இடம் பெற்று வருகின்றன.

ஐ.நா.சபை மாற்றுத்திறனாளிகள் சம்பந்தப்பட்டவரை, அவர்கள் அனைத்து விடயங்களிலும் சமூகத்தில் சமநிலையில் உள்ளவர்கள் எனவும் கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதார வைத்திய கவனிப்பு என்பவை போன்ற அனைத்திலும் அவர்களுக்கான இடம் வழங்கப்பட வேண்டும் எனவும், அனைத்து நாடுகளிலும் இது சம்பந்தமான சட்டமுறைகள் பேணப்பட வேண்டும் எனவும் கூறுகின்றது.

இப்படியிருந்தும் உலகின் பல பகுதிகளில் இது பற்றிய அறிவு, தெளிவு மற்றும் விழிப்புணர்வு என்பன இல்லாமல் அலட்சியப்படுத்தப்பட்டு வருவதை காணலாம். இந் நிலையினை தொடரவிடாது உலகின் விழிப்புணர்வை ஏற்படுத்தி மாற்றுத்திறனாளிகளும் சாதாரண மனிதர்களை போல் சகல உரிமைகளுடனும் வாழ உலக மாந்தர்களும் அரசுகளும் வழி வகைகளை செய்ய முன்வர வேண்டும்.

இவ்வாறான விடயங்களின் வெற்றிக்கு டிசம்பர் 3 மாற்றுத்திறனாளிகள் தினம் வழிகாட்ட வேண்டும்.

**ஆக்கம்**
**நா.கீதாகிருஸ்ணன்.**

## 02 ஐக்கிய நாடுகள் சபையின் வலுவிழந்தோரின் உரிமைகள் தொடர்பான பிரகடனம்



ஐக்கிய நாடுகள் சபை உலகில் வாழுகின்ற வலுவிழந்தோர், ஏனைய மனிதர்களைப் போல் சகல உரிமைகளும் பெற்று கௌரவமாக வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கோடு 1975 ஆம் ஆண்டு வலுவிழந்தோருக்கான உரிமைகளைப் பிரகடனம் செய்தது. உலகில் வாழ்கின்ற அனைத்து மாற்றுத்திறனாளிகளும் இவ் உரிமைகளுக்கு உரித்துடையவர்கள்.

உலகநாடுகள் அனைத்தும் தங்கள் நாடுகளில் வாழும் மாற்றுத்திறனாளிகள் இவ் உரிமைகளுடன் வாழ வழிவகைகளைச் செய்யும் இடத்து வலுவிழந்தோரும் இவ்வுலகில் உரிமைகளுடன் கௌரவமாக வாழ்வதற்கான ஏது நிலை உருவாகும்.

ஐ.நா சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமை சாசனத்தில் வலுவிழந்தோருக்கான வரைவிலக்கணம் குறிப்பிடப்பட்டுள்ளது. வலுவிழந்தோருக்கு வழங்கப்படும் உரிமைகள் எவ்வித வேறுபாடும் இன்றி மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் உரித்துடையது. வலுவிழந்தோர் கௌரவமாக வாழ்வதற்குரிய வாழ்வியல் மற்றும் குடியியல் உரிமைகள், தொழில் தொடர்பான உரிமைகள் இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பொருளாதார சமுதாயப்பாதுகாப்பு விடயங்களில் வலுவிழந்தோர் விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டும். வலுவிழந்தோர் அவமானங்களுக்கு உள்ளாக்கப்படாமல் பாதுகாப்புடன் வாழ்வது தொடர்பாகவும் இச்சாசனத்தில் கூறப்பட்டுள்ளது. அதே வேளை பாதிக்கப்படுமிடத்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் போது விசேடமாகக் கவனிக்க வேண்டிய வலுவிழப்பு தொடர்பான விழிப்புத்தன்மைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. வலுவிழந்தோர் தொடர்பான விடயங்களை மேற்கொள்ளும் போது வலுவிழந்தோருக்காக சேவையாற்றி வருகின்ற நிறுவனங்களின் ஆலோசனையைப் பெறுதல் பயனுடையதாக அமையும். இவ்வுரிமை சாசனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வலுவிழந்தோரது குடும்பத்தினர் மற்றும் சமூகத்தினருக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும். இவ்வாறான அம்சங்களைக் கொண்டதாக இச்சாசனம் அமைந்துள்ளது. இச்சாசனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் பின்னவருமாறு

1. வலுவிழந்தோர் என்ற பதமானது பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றது. ''ஒருவர் பிறப்பிலிருந்தோ அல்லது அதற்கு பின்னராகவோ அவரது முழுமையான அல்லது பகுதியளவிலான உடல் அல்லது உளப்பாதிப்பின் காரணமாக அந்த நபருடைய தனிப்பட்ட அல்லது சமூக வாழ்வின் இருப்பினை உறுதிப்படுத்த முடியாத நிலையில் இருப்பின் அந்நபர் வலுவிழந்தவர் எனக் கருதப்படுவார்''.
2. வலுவிழந்தவர்கள் இப்பிரகடனத்தில் சொல்லப்பட்ட அனைத்து உரிமைகளையும் அனுபவிக்க முடியும். இந்த உரிமைகள் அனைத்தும் அனைத்து வலுவிழந்த

நபருக்கும் எந்த விதமான கட்டுப்பாடோ இன, நிற, பால், மொழி, மத, பூர்வீக, பொருளாதார, பிறப்பு அல்லது அவற்றின் ஒத்த நிலைகளின் அடிப்படையில் இன்றி அனைவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வழங்கப்பட வேண்டும்.

3. வலுவிழந்த அனைத்து நபர்களும் இயற்கையான மனித சுயகௌரவத்தைக் கொண்டுள்ளனர். அத்துடன் பிறப்பிலிருந்தோ அல்லது இயற்கையாகவோ பாதகமான வலுவிழப்பினை கொண்டவர்கள் அனைவரும், ஏனைய அனைத்து அவர்களது வயதை ஒத்த பிரஜைகளைப் போல அடிப்படை உரிமைகள் அனைத்தையும் கொண்டுள்ளனர். அதாவது அடிப்படையானது ஏனைய உரிமைகள் தொடர்பிலும் சாத்தியமான அனைத்து வழிகளிலும் கௌரவமான சாதாரண வாழ்வாதார உரிமையை வலுவிழந்தவர்கள் கொண்டுள்ளனர்.
4. வலுவிழந்த அனைவரும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் அனைத்தையும் ஏனைய சாதாரண நபர்களைப் போலவே கொண்டுள்ளனர். இப்பிரகடனத்தின் 7ஆவது பந்தியில் குறிப்பிட்ட உரிமைகள் தொடர்பில் மனவளர்ச்சி குன்றியோர் தொடர்பில் சாத்தியமான சில மட்டுப்படுத்தல்கள் பிரயோகிக்கப்பட முடியும்.
5. வலுவிழந்தோர் அனைவரும் தமது தன்னம்பிக்கையை அதிகரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தீர்மானிப்பதற்கு உரித்துடையவர்கள்.
6. வலுவிழந்தவர்கள் அனைவரும் உளவியல், மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவதற்கும் செயற்கை அவயங்களைப் பொருத்துவதற்கும் மருத்துவ மற்றும் சமூக, புனர்வாழ்வு, கல்வி, தொழிற்பயிற்சி, உதவிகள், ஆற்றுப்படுத்துகை(உளவள சிகிச்சை) முதலிய சேவைகளைப் பெறுவதற்கும் அவற்றின் மூலம் தமது திறன், வலு என்பவற்றை ஆகக் கூடிய வரையில் விருத்தி செய்வதற்கும், சமூகத்தில் உள்வாங்கப்படவும் அல்லது மீளளிப்பு செய்யப்படவும் தேவையான உரிமைகளைக் கொண்டுள்ளனர்.
7. வலுவிழந்த நபர்கள் பொருளாதார அல்லது சமுதாய பாதுகாப்பினையும் கௌரவமான வாழ்க்கையையும் கொண்டுள்ளனர். அத்துடன் அவர்கள், அவர்களது திறமைக்கேற்ப தொழில் செய்வதற்கும், பயனுள்ள உற்பத்திகளில் ஈடுபடவும், சம்பளம் பெறும் தொழிலை மேற்கொள்வதற்கும், தொழில் சங்கத்தில் இணைவதற்கும் உரிமையை கொண்டுள்ளனர்.
8. சமூக பொருளதார திட்டமிடல் நவடிக்கைகளின் போது வலுவிழந்த நபர்களின் விசேட தேவைகள் கருத்தில் எடுக்கப்படுவதற்கு அவர்கள் உரித்துடையவர்கள்.
9. வலுவிழந்த நபர்கள் அனைவரும் தமது குடும்பத்துடனோ அல்லது பாதுகாவலருடனோ வாழ்வதற்கும் அனைத்து சமூக நடவடிக்கைகளிலும் பங்கேற்பதற்கும் ஆக்கவும் அனுபவிப்பதற்குமான உரிமையினை கொண்டுள்ளனர். மேலும் வலுவிழந்த நபர்கள் எவரும் விசேடமாக அவரது வயதை ஒத்த ஏனைய சாதாரணமானவர்கள் பெறும் வதிவிட வசதியை ஒத்ததாகவே இருக்க வேண்டும்.
10. வலுவிழந்த நபர்கள் கேவலப்படுத்தல், பாகுபாடு காட்டக்கூடிய ஒழுங்குவிதிகள் வழமையான துன்புறுத்தல்கள் அவமானங்கள் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு அளிக்கப்படல் வேண்டும்.
11. வலுவிழந்த நபர்கள் தம்மையும் தமது சொத்துக்களினையும் பாதுகாக்கும் பொருட்டு அவசியமானவிடத்து அவர்களுக்குரிய சட்டரீதியான உதவிகள் கிடைக்கப் பெறக்கூடியதாக இருக்க வேண்டும். வலுவிழந்த நபர்களுக்கெதிராக சட்ட முறைகளை மேற்கொள்ளும் போது அவர்களது உடல் உள நிலைமைகளை பூரணமாக கருத்திற்கொண்டு அதற்கேற்றவாறு நடைமுறைப்படுத்த வேண்டும்.
12. வலுவிழந்த நபர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அனைத்து விடயங்களையும் வலுவிழந்த நபர்களின் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்தல் பயனுடையதாக அமையும்.
13. வலுவிழந்த நபர்கள் அவர்களது குடும்பம், சமூகம் என்பவற்றிக்கு இப்பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து உரிமைகளும் கருத்துக்களும் தெரியப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான உரிமைகள் ஆவணங்களுக்குள் உறங்கிக்கிடக்கும் நிலைமாறி எப்போது விழித்தெழுகின்றதோ அன்று தான் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் நம்பிக்கை விடியல் உதயமாகும்

**ஆக்கம்.**

**நா.கீதாகிருஸ்ண்னன்**

# 03.கேட்டலும் கேட்டல் குறைபாடும்



உலகில் வாழும் மக்களில் சிலர் ஏதோ ஒரு வகையில் உடல் ரீதியாகவோ அல்லது உள ரீதியாகவோ பாதிப்புற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களைத்தான் நாம் விசேட தேவையுடையோர் அல்லது மாற்றுத்திறனாளிகள் என அழைக்கின்றோம். இவ்வாறான மாற்றுத்திறனாளிகளில் ஒரு பகுதியினர் கேட்டல் குறைபாடுடையவர்கள்.

மனிதனின் அன்றாடச் செயற்பாடுகளிற்கு அவனது அங்கங்கள் பெரிதும் துணை புரிகின்றன. அந்த வகையில் செவியின் ஊடான செவிமடுத்தல் செயற்பாடும் முக்கிய இடம் வகிக்கின்றது. இதனூடாக வாழ்க்கை செயற்பாடுகளின் போது மற்றவர்களுடன் இலகுவாகவும் வினைத்திறனுடனும் மனிதன் தனது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றான். இக்கேட்டல் செயற்பாட்டிற்கு துணை புரியும் செவியின் அமைப்பு பற்றி சிறிது நோக்குவோம்.

செவியானது வெளிச்செவி, நடுச்செவி, உட்செவி என பிரதானமான 03 பகுதிகளைக் கொண்டது. உடலின் வெளிப்பகுதியில் காணப்படும் வெளிச்செவியானது கால்வாயினையும் அசையக் கூடிய செவிமடலினையும் கொண்டு உடலின் வெளிப்புறத்தில் காணப்படும். வெளிச்செவி குழாயானது ஒலியை, செவிப்பறை வரை கொண்டு செல்கின்றது. வெளிவாரி கேட்டல் குழாயின் மூன்றில் இரண்டு பகுதி காடி லேஷ்சினால் உருவாக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய மூன்றில் ஒரு பகுதி மண்டையோட்டைச் சேர்ந்த எலும்புகளினால் சூழப்பட்டு உள்ளது. நடுச் செவியானது செவிப்பறை நடுச்செவிக்குழாய், ஊத்தேக்கியாவின் குழல், பட்டையுரு என்பு, சம்மட்டியுரு என்பு, வட்டத்தொளை என்பு ஆகியவற்றை உள்ளடக்கியது. நடுச்செவியானது ஒலியின் அழுத்தத்தை உட்செவிவரை கொண்டு செல்கின்றது. உட்செவியானது மண்டையோட்டில் உள்ளே மிகவும் சூட்சுமமான முறையில் குழல்களைக் கொண்டு அமைந்துள்ளது. என்புகளினால் சூழப்பட்ட சுரள், நத்தையை ஒத்து அமைந்திருக்கும் இது நடுக்காதில் இருந்து கிடைக்கும் இயந்திர சக்தி மெல்லிய சவ்வை அதிரச் செய்து மூளைக்கு அனுப்புகின்றது. உடலின் சம நிலையையும் காக்கின்றது.

**கேட்டல் செயற்பாடு எவ்வாறு நிகழ்கின்றது என பார்ப்போம்.**

கேட்டல் என்பது வெளிச்செவிச் சோணையில் இருந்து ஆரம்பமாகின்றது. வெளிச்செவிச் சோணையை அடைந்த ஒலி அலைகள் செவிக்கால்வாயூடாக நடுச்செவியை அடைகின்றது.

செவிப்பறையில் காணப்படும் சம்மட்டியுரு, பட்டையுரு, ஏந்தியுரு என்புகள் செவிப்பறை அதிரும் போது ஒலியைப் பெரிதாக்கி உட்செவிக்கு அனுப்புகின்றன. உட்செவி நத்தையுருவில் உள்ளது. இதில் திரவம் நிரப்பப்பட்டுள்ளது. அத்துடன் ஆயிரக்கணக்கான மெல்லிய மயிர்க்கலன்கள் உள்ளன. அதிர்வுகள் திரவமூடாக செல்லும் போது மயிர்க்கலன்கள் ஒலி அலைகளை மின் நரம்பு கணத்தாக்கமாக மாற்றி அவற்றைச் செவி நரம்புக்கு அனுப்புகின்றன. இந்த நரம்புகள் உட்செவியினையும் மூளையினையும் இணைப்பதனால் இந்த கணத்தாக்கங்கள் மூளையை அடையும் போது

அவை ஒலிகளாக வியாக்கியானப்படுத்துகின்றன. இது நீண்ட செயன்முறை போல் தோன்றினாலும் ஒரு நொடியில் நடைபெற்று விடுகின்றது.

அடுத்து கேட்டல் குறைபாடு எவ்வாறு ஏற்படுத்துகின்றது எனப் பார்ப்போம்

- ❖ வெளிச்செவியில் அல்லது நடுச்செவியில் ஏற்படும் தடை, தடங்கல், தேசம் என்பவற்றால் கடத்தல் கேட்டல் குறைபாடு ஏற்படுகின்றது. இக்குறைபாட்டினை உணர்வு நரம்புக்கேட்டல் குறைபாடு, கலப்புக்கேட்டல் குறைபாடு என வகைப்படுத்தலாம்.

- ❖ உட்செவியில் அல்லது கேட்டல் நரம்புத்தொகுதியில் ஏற்படும் சேதத்தினால் உணர்வு நரம்பு கேட்டல் குறைபாடு ஏற்படுகின்றது. கடத்தல் கேட்டல் குறைபாடு உணர்வு நரம்பு கேட்டல் குறைபாடு என்பவற்றின் பண்புகளின் கலப்பினால் கலப்பு கேட்டல் குறைபாடு ஒருவரது கேட்டல் திறனை பகுதியளவிலேயே பாதிப்படையச் செய்யும். இக் குறைபாட்டினை மருந்துகள் அல்லது சத்திரசிகிச்சையூடாக குணப்படுத்த முடியும் என மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

- ❖ உணர்வு நரம்பு கேட்டல் குறைபாடு கடுமையாகும் இடத்து முழுமையாக கேட்கும் திறனை ஒருவர் இழக்க நேரிடும். சில வேளைகளில் தெளிவாக கேட்க முடியாத நிலை உருவாகும். இதனை மருத்துவர்கள் மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைகள் மூலம் குணப்படுத்த முடியாது என்கின்றனர்.

- ❖ கலப்பு கேட்டல் குறைபாடு மேற்குறிப்பிட்ட இரு கேட்டல் குறைபாட்டு பண்புகளையும் கொண்டுள்ளன.

**செவிப்புலன் இழப்பின் பொதுவான வகைகள்**

- ❖ கடத்தல் சார்ந்த கேட்டல் இழப்பு
  இது ஒலிசார் புலனை தடுக்கின்றது. வெளிச்செவியில் இருந்து உட்செவிக்கு ஒலி கடத்தப்படும் போது ஏற்படும் தடையால் இது ஏற்படுகின்றது.

- ❖ புலன் சார் நரம்பு கேட்டல் இழப்பு
  உட்செவியில் அல்லது கேட்டல் நரம்புத்தொகுதியில் ஏற்படும் குறைபாட்டினால் இது ஏற்படுகின்றது. இதன் காரணமாக உட்செவியில் பல்வேறு பகுதிகள் பாதிக்கப்படலாம். இதனால் சாதாரண ஒலியை கேட்கக் கூடியதாக இருக்கும். ஆனால் உச்ச ஓசைகள் கேட்க முடியாமல் இருக்கும்.

- ❖ கலந்த கேட்டல் குறைபாடு
  இது கடத்தல் மற்றும் புலன்சார் நரம்பு கேட்டல் இழப்பை குறிக்கும்.

- ❖ மத்திய கேட்டல் இழப்பு
  இது மத்திய நரம்பு தொகுதியில் ஏற்படும் குறைபாடுகளினால் ஏற்படுகின்றது. இதில் மூளையில் அல்லது மூளைக்கு செல்லும் நரம்புகளில் ஏற்படும் குறைபாடுகளும் உள்ளடங்கும்.

கேட்டல், குறைபாடு என்பவற்றை அளவீடு செய்வதற்கு நாம் ஓரிரு கேட்டல் மாணிகளை பயன்படுத்துகின்றோம்.
கேட்டல் மாணி என்பது சத்தத்தை கட்டப்படுத்த கூடிய பல்வேறு புள்ளி கணக்குகளின் கீழ் தெளிவான குறியீடுகளை வெளியிடக்கூடிய ஒரு கருவியாகும்.
இதன் மூலம் கேட்டல் வரைபடம் ஒன்றில் தேவையான தரவுகளை குறித்து கொள்ளலாம். மனிதர் ஒரு சத்தத்தின் தீவிர தன்மையினை டெஸிபல் மூலமே பெற்றுக் கொள்கின்றனர். 125db அளவுடைய அல்லது அதனை விட கூடிய சத்தம் சாதாரண மனித செவிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் 0-120 வரையிலான டெஸிபல் மட்டத்தின் ஊடாக பல்வேறு இடைவெளிகளில் கேட்டல் அளவு அளவிடப்படும் கணக்கிடுதலை கேட்ஸ் அலகின் மூலமே அளவிடுவர்.

❖ சாதாரணமாக கேட்க கூடிய நபரால் அதில்15dB அல்லது அதற்கு குறைந்த ஒலிகளை வேறுபடுத்த முடியும்.

சாதாரண செவிப்புலன் குறைபாடு கொண்ட நபருக்கு குறைந்தது 15-45 dB மட்ட ஒலிகளைக் கேட்க முடியும். பேச்சு, உரையாடல் சாதாரணமாக இருந்த போதும் அவரால் தூரத்து ஒலிகளைக் கேட்க முடியாது. ஆரம்பத்தில் அவரின் பேச்சு மற்றும் மொழி விருத்தி தாமதப்படும். மத்திமமான செவிப்புலன் குறைபாடு கொண்ட நபருக்கு 45-70 dB மட்ட ஒலிகளை கேட்க முடியும். இந்த நிலை ஏற்படின் சாதாரண உரையாடலில் பங்குபற்ற முடியாது பேச்சுத் தெளிவும் தடைப்படும்.

கடுமையான செவிப்புலன் இழப்பைக் கொண்ட நபருக்கு குறைந்தது. 70-90 dB ஒலிமட்டமே சத்தம் கேட்கும். இப்பிள்ளை சாதாரண உரையாடலில் ஈடுபட முடியாது. சிலவார்த்தைகளை மாத்திரம் கேட்க முடியும். இவர்களுக்கு கேட்டல் உபகரணங்கள் அவசியம். மிகக் கடுமையான கேட்டல் குறைபாடு கொண்டோருக்கு90 dB க்கு மேற்பட்ட ஒலி மட்டமே சத்தம் கேட்கும். மிகக் கூடிய ஒலிக்கு பிள்ளை துலங்க முடியும். ஆனால் தொடர்பாடல் கொள்ள முடியாது.

1. கேட்டல் பிரச்சினை ஏற்படுவதற்கான மேலும் சில காரணங்கள்
   - காதிலுள்ள பஞ்சு மற்றும் சிறுபொருட்கள் சென்று அடைப்பை ஏற்படுத்துதல்.
   - காது நோய்களினால் ஏற்படும் பாதிப்புக்கள்

2. கேட்டல் பிரச்சினையுடையோரிடம் காணப்படும் இயல்புகள்.
   - காதிலிருந்து திரவம் வடிதல்
   - வெளிக்காதில் தொற்று
   - காதில் துர்மணம்
   - தொடர்ந்து வாயினால் சுவாசித்தல் காதை அடிக்கடி இழுத்தல்.

1. கேட்டல் குறைபாடுடைய நபரை இனங்காணல்.
   - தொடர்ச்சியான கவனமின்மை
   - வாய்மொழி எடுத்துரைப்புக்களை கேட்பதில் சிரமம்
   - மற்றவர்கள் பேசும் போது உதடுகளை கவனமாகப் பார்த்தல்
   - பேசுபவரை நோக்கி தலையை சரித்தல்
   - திரும்பவும் சொல்லுமாறு கேட்டல்
   - ஒரே மாதிரியான வார்த்தைகளைக் கேட்கும் போது குழம்புதல்.
   - உரையாடல்களில் தன்னையறியாமல் இடைநிறுத்துதல்.
   - ஒலியின் மூலத்தை அறிய முடியாமை
   - ஒலிப்பதற்கு சிரமம்
   - ஒரே மட்டத்திலான குரலோசை
   - தன்னையறியாமல் திக்கிப்பேசல்
   - மிக மெதுவாகக் கதைத்தல்
   - குறைந்த சொற்களஞ்சியம்
   - தாமதித்த மொழி விருத்தியை காட்டுதல்
   - பின்னாலிருந்து அழைக்கும் போது துலங்குவதில்லை
   - யாரும் கதைக்கும் போது கவனம் செலுத்துவதில்லை.
   - ரேடியோ, ரிவி முதலியவற்றின் ஒலியைக் கூட்டுதல்

இவ்வாறான அறிகுறிகள் ஒருவரிடம் காணப்படும் இடத்து உரியமருத்துவரை அணுகி (END) ஆலோசனைகளை அல்லது மருத்துவசிகிச்சைகளை பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். இதன் ஊடாக கேட்டல் குறைபாட்டினை நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

**ஆக்கம்:**

**நா.கீதாகிருஸ்ணன்.**

# 04. விசேட தேவையுடையோர் தொடர்பான ஓர் பார்வை

த.சிவகுமார்

உதவிக் கல்விப் பணிப்பாளர்

வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.



**மாற்றுத்திறனாளிகளின் வகைப்பாடு**

மாற்றுத்திறனாளிகள் என்று நோக்கப்படுபவர்கள் பல்வேறு நாடுகளிலும், பல்வேறு பதம் கொண்டு அழைக்கப்படுகின்றனர். இலங்கையைப் பொறுத்த வரையில் விசேட தேவையுடையோர், மாற்றுத்திறனாளிகள், மாற்றாற்றலுடையோர் என்றும், இந்தியாவில் சிறப்புத்தேவையுடையோர், மாற்றுவலுவுடையோர் என்றும் வளர்முக நாடுகளில் Special Needs Disabie என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களின் வகைப்பாட்டினை நோக்குமிடத்து

- பிரித்தினியாவில் 1944ம் ஆண்டு கல்விச் சட்டத்தின் பிரகாரம் விசேட தேவையுடையோர் 10 வகையினராக வகைப்படுத்தப்பட்டனர்.
- 1950ஆம் ஆண்டு ஐக்கிய அமொரிக்காவில் விசேட தேவையுடையோர் 12 வகையினராக வகைப்படுத்தப்பட்டனர்.
- 2005ம் ஆண்டு காலப்பகுதியில் விசேட தேவையுடையோர் 13 வகையினர் என உலக நாடுகள் அனைத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**தற்போது விசேட தேவையுடையோர் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றனர்.**

1. மீத்திறனும், விசேட நிபுணத்துவமும்
2. அறிவுசார் குறைபாடுகள்
   - டவுண் சகசம்
   - குறுந்தலை
   - மூளையில் நீர் தேங்குதல்
   - ஐதரொயிட்
3. ஓட்டிசம்
4. நடத்தை ஒழுங்கீனம்

- ஒழுங்கற்ற அதீத நடத்தைச் செயற்பாடு
- நடத்தை ஒழுங்கீனம்
- எதிர்ப்பு நோக்கமுள்ள ஒழுங்கீனம்

5. உடல் மற்றும் ஆரோக்கிய குறைபாடுகள்

உடற் குறைபாடுகள்

- மூளைச் சோர்வு
- ஸ்பைனபபிட்டா
- தசைநார் அழற்சி
- போலியோமைலிற்றிஸ்

**ஆரோக்கிய குறைபாடுகள்**

- வலிப்பு
- ஆஸ்துமா
- நீரிழிவு
- ஒவ்வாமைகள்
- குருதிச் சுற்றோட்ட நோய்கள்

6. பேச்சு மற்றும் மொழிகள் சார் ஒழுங்கீனம்
7. கற்றல் குறைபாடுகள்
   - டிஸ்லெக்சியா
   - டிஸ்கல்குலியா
   - டிஸ்பிராக்சியா
   - டிஸ்கிராபியா
   - சொல்சாரா கற்றல் இயலாமைகள்
8. மனவெழுச்சி நடத்தைப் பிரச்சினைகள்
9. புலன் சார் குறைபாடுகள்
   - கேட்டல் குறைபாடுகள்
   - பார்வை குறைபாடுகள்
   - பார்வை, கேட்டல் குறைபாடுகள்
10. மெதுவாக உள வளர்ச்சியடைதல்
11. பல்வித இயலாமைகள்
12. வேறு சுகாதாரக் குறைபாடுகள்
13. மூளையில் ஏற்பட்ட பாதிப்புக்கள்
14. உடல் அவையக் குறைபாடு
15. தொடர்பாடல் குறைபாடு
16. மனநிலை பாதிக்கப்பட்டோர்
17. சமூக விரோதநடத்தைகள்
18. ஆக்கத்திறனுடைய பிள்ளைகள்
19. உளக் குறைபாடுடைய பிள்ளைகள்
20. பொருத்தமற்ற நடத்தைப் பிரச்சினையுடைய பிள்ளைகள்
21. கவனமிழப்பும், பிறழ்வும்

**மாற்றுற்றலுடையோர் தோன்றுவதற்கான சில காரணங்கள்**

**1) பிறப்பிற்கு முன்னரான காரணிகள்**

- மரபணு (ஜீன்) குறைபாடுகள்
- தாயின் வயதெல்லை
- தாயின் ஆரோக்கியம்
- கருவுற்ற காலத்தில் ஏற்பட்ட நோய்கள்
- கருவுற்ற தாய் உட்கொள்ளும் மாத்திரைகள், கதிர் வீச்சு
- கருவுற்ற தாயின் போசாக்கு
- இரத்த உரித்து திருமணங்கள்

2) **பிறப்பின் போதான காரணிகள்**

- குறைப்பிரசவம்
- சிசுவின் பிறப்பு எடை குறைவாக இருத்தல்
- பிறந்தவுடன் சிசுவின் சுவாசம் தடைப்படல்
- கருப்பையில் சிசுவின் அமைப்பு புற நடையாகக் காணப்படல்
- கருப்பையில் தொப்பிள் கொடி சிசுவின் கழுத்தை சுற்றியிருத்தல்
- ஆயுதப் பிரசவத்தினால் அல்லது பிற காரணங்களால் சிசுவின் தலையில் இரத்தக் கசிவு
- தாய்க்கு அளிக்கப்படும் மயக்க மருந்து அல்லது வலி நிவாரணிகள்
- தாயின் இடுப்பு எலும்பு குறுகியிருத்தல்

3) **பிறப்பிற்குப் பின்னர்**

- தொற்று நோய்கள் ஏற்படல்
- தொடர்ந்து குழந்தைகளுக்கு ஏற்படும் மூளைக் காயங்கள்
- சத்துணவுக் குறைபாடுகள்

**மாற்றுத்திறனாளிகளுக்கான சர்வதேச உரிமைகள் சாசனம்**

- ❖ யுனிசெவ் நிறுவனத்தின் சிறுவர் உரிமைகள் சாசனத்திலே உயிர் வாழுதல், பங்கு கொள்ளல், மேம்பாடு பாதுகாப்பு என்ற பிரிவினை உள்ளடக்கிய 54 உறுப்புரைகளில், உறுப்புரை 1, 23, 28, 29, 30, 31 மாற்றுத்திறனாளிகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தில் உள்ள உறுப்புரை 30இல் கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் மாற்றுத்திறனாளிகள் அனுபவிக்கும் உரிமையுடையவர்கள்.
- ❖ 1975ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் வலுவிழந்தோர் உரிமைப் பிரகடனம்
- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் வலுவிழந்தோர் சாசனம் 2007
- ❖ ஆசிய பசுபிக் வலுவிழந்தோருக்கான 10 ஆண்டுகளும் BIWAKO மிலேனிய சட்டக செயற்பாடு
- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் வலுவிழந்தோர் பற்றிய நியம விதிகள்.

**மாற்றுத்திறனாளிகளுக்கான இலங்கையின் ஏற்பாடுகள்**

கன்னங்கராஅறிக்கை 1943

ஜெயசூரிய அறிக்கை 1961

ஜீன்கொன்மோர் அறிக்கை 1962-1965

புதிய கல்வி மறு சீரமைப்பு 1972

போகொட பிரேமரத்ன அறிக்கை 1979

கல்வி வெள்ளையறிக்கை 1981

புதிய கல்வி மறுசீரமைப்பு 1997

1. 1996ம் ஆண்டு 28ம் இலக்க ஊனமுற்ற ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டமும், 2003ம் ஆண்டு அதற்கான திருத்தமும்
2. 2003ம் ஆண்டு வலுவிழப்புடன் கூடிய நபர்கள் பற்றிய தேசிய கொள்கை
3. அரசாங்க சுற்றறிக்கை இலக்கம் 27/28
4. ரணவிரு அபிவிருத்தி அதிகார சபை
5. விழிப்புலன் அற்றோர் புனர்வாழ்விற்கான நம்பிக்கை நிதியம்.

6. 2006ம் ஆண்டின் 1ம் இலக்க அங்கவீனமுற்ற ஆட்கள் (அணுகுதல்) தொடர்பான ஒழுங்கு விதி

**சமூகத்தின் கடமைகளும் பொறுப்புக்களும்**

- ✓ மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக சமூக மட்டத்தில் நேர் மனப்பாங்கு காணப்படல்.
- ✓ மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் வழங்குதல், அவர்களின் திறமைகளை மதித்து ஊக்குவிப்பு வழங்குதல்.
- ✓ உட்படுத்தல் கல்வி சிந்தனையை வெற்றியடையச் செய்தல்
- ✓ விசேட தேவையுடையோருக்கான பராஒலிம்பிக், சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டுக்களில் ஈடுபட உதவுதல்.
- ✓ மாற்றுத்திறனாளிகள் பொது இடங்களில் பிரவேசிப்பதற்கான ஏற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- ✓ மாற்றுத்திறனாளிகள் கல்வி, மருத்துவம், பொது இடங்களில், பல்கலைக்கழகங்கள் ஏனைய நிறுவனங்களில் அங்கம் வகிப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- ✓ கெலன்கெலர், ஸ்டீபன் வில்லியம்ஹாக்கிங், பெஸ்டோறியஸஸ், நிக் போன்ற உலகப்புகழ் பெற்ற மாற்றுத்திறனாளிகளின் வரலாற்றை அறிவதோடு அவர்கள் வழியில் ஏனையோரை வழிப்படுத்துதல்.

# 05. விசேட தேவையுடையோர் தொடர்பான ஓர் பார்வை


த.சிவகுமார்

உதவிக் கல்விப் பணிப்பாளர்

வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.




**கடந்த இதழ் 25ன் தொடர்ச்சி.........**

- ➢ **மாற்றுத்திறனாளிகளுக்கான அரசாங்கத்தினுடைய செயற்பாடுகள் பின்வரும் துறைகளில் நோக்கப்படுகின்றது.**

அ. கல்வித்துறை

ஆ. சுகாதாரத்துறை

இ. பொருளாதாரத்துறை

ஈ. சமூகநலத்துறை

**விசேட கல்வி**

உடல், உள, சமூக மனவெழுச்சி பாதிப்புக்குள்ளான மாணவர்கள், சாதாரண மாணவர்களைவிட பல சிக்கலான நடத்தைகளைக் காட்டுகின்றனர். அத்துடன் அவர்கள் தேர்ச்சி மட்டத்தை அடைய முடியாது தத்தளிக்கின்றனர். அவ்வாறான மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வியே விசேட கல்வி ஆகும்.
மாணவர்கள் ஒவ்வொருவரும் தனியாள் வேறுபாடுகளைக் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். அதாவது நாம் ஒவ்வொருவரும் பல்வகைமை உடையவர்களாகக் காணப்படுகின்றோம். அதற்கான அடிப்படை ஒவ்வொருவரும் கொண்டுள்ள நுண்மதி ஆற்றலுக்கேற்ப வேறுபடுகின்றன.
ஒருவருடைய நுண்மதியானது பின்வரும் முறைகளிலே மதிப்பீடு செய்யப்படுகின்றது. நுண்மதி ஈவின் தன்மைக்கேற்ப மாணவர் பல்வகைமை மதிப்பிடப்படும்.

நுண்மதி ஈவு = உள வயது X 100
கால வயது

- **மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட கல்வி கொள்கையில் இனங்காணத்தக்க காலகட்டங்களாக பின்வருமாறு நோக்கலாம்.**

1) நிறுவனமயப்படுத்தல்
2) உதவி பெறும் விசேட பாடசாலைகள்
3) ஒன்றிணைத்தல்
4) விசேட கல்வி அலகு
5) உட்படுத்தல் கல்வி

**நிறுவனமயப்படுத்தல்**

கல்வி வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்தது ஐரோப்பியரின் வருகையின் பின்னரான காலப்பகுதியாகும்.

- 1505-1656 போர்த்துக்கேயர் காலத்தில் அநாதைப்பிள்ளைகளுக்கு கல்வி வழங்கவும் தொழில்வழிகாட்டவும் முகத்துவாரத்தில் அநாதைப்பிள்ளைகளுக்கு பாடசாலைகளை அமைத்தனர்.
- 1656-1796 ஒல்லாந்தர் காலத்தில் அநாதைப்பிள்ளைகளின் மடங்கள் விஸ்கமிர் எனவும், வறிய குடும்பங்களின் இல்லங்கள் அறிமென்கஸ் எனவும் அழைக்கப்பட்டன.
- 1796-1948 பிரித்தானியர் காலம் அநாதைப் பிள்ளைகளுக்கான பாடசாலைகள் புனரமைப்பு செய்யப்பட்டு நோர்த் என்பவர் தலைமையில் வலுப்பெற்றது.

**உதவி பெறும் விசேட பாடசாலைகள்**

- 1912ம் ஆண்டு கண் பார்வை இழந்தவர்களுக்காக முதன்முதலில் இரத்மலானையில் விசேட பாடசாலை நிறுவப்பட்டது.
- 1935ல் கேட்டல் குறைபாடுடைய மாணவர்களுக்காக மகாவெல deaf school தோற்றம் பெற்றது.
- 1956ம் ஆண்டு கேட்டல் பார்வைக் குறைபாடுடையவர்களுக்காக கைதடியில் deaf blind school தமிழ் மொழி மாணவர்களுக்கென உருவாக்கப்பட்டது.

(தற்போது இலங்கையில் 125 விசேட கல்விப்பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது)

**ஒன்றிணைத்தல்**

1966ம் ஆண்டு ஜீன்கொன்மோர் அறிக்கைக்கு அமைவாக 1969ம்ஆண்டு காலப்பகுதியில் கல்வி அமைச்சராக இருந்த IMRA ஈரியகொல அவர்களின் பரிந்துரைக்கு அமைய சாதாரண பாடசாலைகளில் ஊனமுற்ற மாணவர்களும் ஒன்றிணைக்கப்பட்டனர்.

**உட்படுத்தல் கல்வி**

இன்று உலக நாடுகள் எல்லாவற்றினாலும் மாற்றுத்திறனாளிகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற ஏற்பாடாக உட்படுத்தல் கல்வி எண்ணக்கரு காணப்படுகின்றது. அதாவது மாற்றுத்திறனாளிகள் தாம் வாழும் சூழலிலே தமக்கு அண்மையிலுள்ள பாடசாலையொன்றிலே சாதாரண மாணவர்களுடன் ஒன்றாகச் சேர்ந்து கற்கும் வாய்ப்பு உட்படுத்தல் கல்வி எனலாம்.

**உட்படுத்தல் கல்விக்கான அடிப்படைகள்**

- ❖ கல்வி கட்டளைச் சட்டத்தின் 37ம் பிரிவின் இலக்கம் 1963/30 அதிவிசேட வர்த்தகமானிப் பத்திரிகையின் படி கட்டாயக்கல்வி வயதெல்லை 5-16 என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ 1961ம் ஆண்டு தேசிய ஆணைக்குழு அறிக்கையில் 6-14 வயதிற்குட்பட்ட சகலரும் பாடசாலைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட வேண்டும்.
- ❖ 1990ம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் சாசனத்தில் சகலருக்கும் கல்வி என்ற கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- ❖ 1994 ஸ்பெயின் நாட்டின் சலமன்கா நகரில் 92 நாடுகள் பங்கு கொண்ட மாநாட்டில் உட்படுத்தல் கல்வி ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- ❖ 1997ம் ஆண்டு கட்டாயக்கல்வி கட்டளைகளுக்கு அமைவாக 10053/03 இலக்க விசேட வர்த்தகமானியின் மூலம் 5-14வயதிற்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**விசேட கல்வியின் தற்போதைய நிலை**

- ❖ 1989ம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சாசனத்திலே 18வயதிற்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்கள் எனக் கருதப்பட்டமை.
- ❖ 1985ம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகத்திலே விசேடகல்வி தாபிக்கப்பட்டது.
- ❖ 1985ம் ஆண்டு மகரகம ஆசிரியர் கலாசாலையில் பிரெயில் அச்சகம் அமைக்கப்பட்டது.
- ❖ 1989ல் நாடு பூராகவும் விசேடகல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.
- ❖ 1992ல் விசேடகல்விமானி பாடநெறி தேசியகல்வி நிறுவகத்திலே ஆரம்பிக்கப்பட்டது.
- ❖ 1997ம் ஆண்டு காப்பிற்றிக்கம தேசியகல்வியியற் கல்லூரியில் விசேடகல்வி டிப்ளோமா பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.

**சுகாதாரத்துறை**

மாற்றுத்திறனாளி ஒருவரை பின்வரும் முறைகளில் கண்டு கொள்ளலாம்.

A -Appierance வெளித்தோற்றம்

B -Vehavior நடத்தை

C -Communication தொடர்பாடல்

இவ்வாறு இனங்கண்டாலும் அதனை உறுதிப்படுத்துபவர் வைத்தியராவார். இவருக்கான வைத்திய அறிக்கையை இம்மருத்துவரால் மட்டுமே வழங்க முடியும். இதனைக் கொண்டே இவருக்கான கற்றல் செயற்பாடுகள், மருத்துவவசதி, ஏனைய சேவைகள் வழங்கப்படவுள்ளன. சகல குடிமக்களதும் வாழ்காலத்தை நீடிப்பதும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதுமே இலங்கையின் சுகாதாரக் கொள்கையாகும். ஆரோக்கியமான வாழ்க்கைக் கோலங்களை முன்னேற்றுவது நோய்களையும், குறைபாடுகளையும்

தடுப்பது, வலது குறைந்தோருக்கு புனர்வாழ்வளிப்பது என்பன இக்கொள்கையின் பிரதான அம்சங்களாகும்.

இதனை அடையும் பொருட்டு பின்வரும் உபாயங்கள் அமுல்படுத்தப்படும்.

1) அரச, அரசசார்பற்ற தனியார் துறை முகவர்கள் மற்றும் விசேட தேவையுடையோரை கொண்ட அமைப்புக்களிடையே ஒத்துழைப்பினை கட்டியெழுப்புதலும் பலப்படுத்தலும்.
2) சமுதாய விழிப்புணர்வும் சுகாதார மேம்பாட்டிற்கு சமுதாயத்தைத் திரட்டலும்.
3) வலதுகுறைவு ஏற்படக்கூடிய நிலைமைகளைத்தடுக்க தொடக்கத்திலேயே நோயைக் கண்டு பிடிக்க சிகிச்சை வழங்க, வினைத்திறனுடன் வைத்திய சிகிச்சை மேற்கொள்வதை உறுதி செய்தல்.
4) புனர்வாழ்வளிக்கும் சகல மட்டங்களிலும் போதுமான பயிற்றப்பட்ட ஆளணியினரை உறுதி செய்ய மனித வளத்தை விருத்தி செய்தல்.
5) உதவு கருவிகள் வழங்கவும், மீளக்குடியமர்த்தவும் சேவைகளை உறுதிப்படுத்தும் வகையில் அரச, அரசசார்பற்ற முகவர்களிடையே ஒத்துழைப்பை விருத்தி செய்தல்.
6) பிராந்திய வலையமைப்பினை உருவாக்க உதவுதல்.

**சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிகள்**

சமுதாயத்தில் பலவீனமான நிலையில் காணப்படும் வறியோர், முதியோர், அங்கவீனர், பிணியாளர், போன்றோருக்கான புனர்வாழ்வு உதவிகள் வழங்குவதன் மூலம் அவர்களது முழுமையான பங்களிப்பை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பெற முடியும் என்பது அரசாங்கத்தின் நம்பிக்கையாகும். இதன் பொருட்டு பல்வேறு வகையான சேவைகளை அரசாங்கம் வழங்கி வருகின்றது. இச்சேவைகள் பல்வேறு வகையான திட்டங்கள் மூலம் சமூகசேவைகள் திணைக்களத்தினால் பிரதேச செயலகத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில்

- குணமாக்க முடியாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல்.
- பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்குதல்.
- சுயதொழில் செய்வதற்கான ஊக்குவிப்பு வழங்குதல்.
- மாற்றாற்றல் உடையோருக்கான உபகரணங்கள் வழங்கல் (முச்சக்கர வண்டி, சக்கரநாற்காலி, ஊன்றுகோல்கள், வெள்ளைப்பிரம்பு, காது கேட்கும் கருவி, செயற்கை உபகரணங்கள், மூக்குக்கண்ணாடி வழங்கல்)
- மாற்றாற்றல் உள்ளோருக்கான விசேட தொழிற்பயிற்சிகள், விசேடகல்வி அலகில் இணைக்கும் செயற்பாடுகள்.
- மாற்று ஆற்றலுள்ள பிள்ளைகளை இல்லங்களில் அனுமதித்து உதவுதல்.
- சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வுத்திட்டம் ஊடாக மாற்றாற்றல் உடையவர்களை குடும்ப சூழலில் பராமரிக்கும் வாய்ப்பை வழங்குதல்.
- மாற்று ஆற்றல் உள்ளோருக்கான உதவித் தொகையினை வழங்குதல்.
- சர்வதேச மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை மார்கழி மாதம் 3ம் திகதி கொண்டாடுதல்.

**அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிகளை பின்வருமாறு குறிப்பிடலாம்**

- கல்வி சார் நடவடிக்கைகள்
- மருத்துவ வசதிகள் வழங்கல்
- விளையாட்டு செயற்பாடுகள்
- செயற்கை அவயங்கள் வழங்கல்
- சுயதொழில் வழிகாட்டல்
- ஆலோசனை வழிகாட்டல்
- குடும்பங்களின் கட்டுமானம்
- சிறுவர் பராமரிப்பு செயற்பாடுகள்

தொகுத்து நோக்குமிடத்து மாற்றுத்திறனாளிகளின் ஆற்றல்களை இணங்கண்ட உலக நாடுகள் உட்படுத்தற்கல்வி சிந்தனையினூடாக அவர்களையும் ஒரு நாட்டின் வளமாக

கருதி பொருளாதாரத்தின் பங்காளிகளாக்கிக் கொண்டுள்ளன எனலாம். எனவே நாம் அனைவரும் அவர்களின் ஆற்றலுக்கு மதிப்பளிப்போம்.

# 06. கற்றலில் இயலா நிலையும் அதன் பிரயோகங்களும்

கிரிஜா.கந்தசாமி

விரிவுரையாளர்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி



## அறிமுகம்

கற்றலில் இயலாநிலை அல்லது கற்றலில் பிரச்சினை என்பது பிள்ளைகளுக்கு அடிப்படை திறன்களில் ஒன்று அல்லது மேம்பட்டவற்றில் சிக்கல்கள் ஏற்படுவதை குறிக்கும். இவர்கள் எழுதுதல், வாசித்தல், கிரகித்தல், ஞாபகப்படுத்தல் போன்றவற்றிலே இடறுவர். கற்றலில் இயலாநிலை காணப்படும் போது செய்திகளைப் புரிந்து கொள்ளும் திறன் அல்லது ஆற்றல் குறைவாகக் காணப்படும். தாங்கள் பேசும், எழுதும் மொழியைப் பயன்படுத்துவதிலும், புரிந்து கொள்வதிலும் பிரச்சினை காணப்படும். கற்றலில் முன்னேற்றமோ அல்லது பின் தங்கிய நிலையோ ஒரே சீராக இருப்பதில்லை. கற்றலில் இயலாமை உடைய பிள்ளைகளுடன் இருந்து ஆசிரியர் எதிர்பார்க்கும் நிலைக்கும் அவர்கள் உண்மையிலே பெறும் அடைவுத்திறன் நிலைக்கும் பெரிய இடைவெளி காணப்படும் குழந்தைகளே கற்றலில் இடர்பாடுடைய குழந்தைகளாவர்.

## கற்றல் குறைபாட்டு மாணவர்களின் இயல்புகள்

கற்றலில் குறைபாடுடைய மாணவர்களின் இயல்புகள் பற்றி பார்க்கும் போது திறன் அளவு வேறுபட்டுக் காணப்படும். ஒரு சில குழந்தைகள் அதிக சுறுசுறுப்பாக இருப்பர், முன்வரத் தயங்குவர், ஒரு இடத்தில் அமரச் செய்வது கடினம், இயக்கங்களில் ஒருங்கிணைப்பின்மை காணப்படும், கவனம் தொடர்பாக பிரச்சினைகள் காணப்படும் (கவனச்சிதறல், விடாமுயற்சி), பார்வை தொடர்பாக பார்த்தவற்றை வேறுபடுத்துவதில் இயலாமை, மனதில் வைத்துக் கொள்ள இயலாமை என்பவை காணப்படும், கேட்டலில் கேட்ட ஒலிகளைப் புரிந்து கொள்ள இயலாமை காணப்படும், மொழி செய்யும் வேலையின் தன்மை போன்றவற்றில் பேச்சு வளர்ச்சி தாமதமாகவோ அல்லது

மெதுவாகவோ ஏற்படும், வேலைகள் மிக மெதுவாக செய்ய விரும்பலாம், கவனமின்மை குழப்பம் காணப்படல் போன்ற இயல்புகள் காணப்படும். கற்கும் பாடங்களை கடினமாக உணர்தல் காணப்படும்.

கற்றலில் இயலாநிலை ஏற்படுவதற்கு ஒவ்வொரு பருவ முதிர்ச்சியிலும் தாமத நிலைகள், நரம்பு மண்டலம் முறையற்ற தன்மையில் ஏற்படல், கல்விப் புலத்தில் கற்பித்தலில் உள்ள குறைபாடுகள், கற்பித்தல் சாதனங்களின் தரக்குறைவு, நம்பிக்கையின் குறைபாடுகள், கற்றலுக்கேற்ற உடல்நிலை இல்லாதிருத்தல், நரம்பு சம்பத்தப்பட்ட ஒவ்வாமை, சத்துணவு இன்மையும், சத்துக் குறைபாடுகளும் மூளை செயற்படுவதில் ஓரளவு பாதிப்பு, பரம்பரை வியாதிகள், தசையியக்கங்களின் ஒருங்கிணைப்பின்மை, பொருத்தமற்ற நடத்தை, உயிர் அணுக்கள் கலவையில் ஏற்படும் முறைகேடுகள் காரணங்களாக அமைகின்றன.

**கற்றல் இயலாமைக்கான காரணங்கள்**

கற்றல் இயலாமையானது மனவளம் குன்றுவதாலோ நரம்பு மண்டல பாதிப்பாலோ, பண்பாட்டு சூழ்நிலை பழக்கவழக்கங்களாலோ ஏற்படுவதில்லை. மூளைக் கோளாறு அல்லது மூளை சரியாக பணியாற்றாமை அல்லது உணர்வுகள் பாதிக்கப்படுதல் போன்றவை கற்றலின் இயலா நிலைக்கு காரணங்களாக இருக்கலாம். இவர்களுக்கு கற்றலில் ஆர்வம் குறைவாக காணப்படுவதால் இவர்கள் பாடசாலையை விட்டு நீங்கவும் அல்லது ஒரே வகுப்பில் இரண்டு அல்லது மூன்று வருடங்கள் படிப்பதற்குமான நிலை ஏற்படுகின்றது. மருத்துவர்கள் கற்றலின் குறைபாட்டினை நரம்பு மண்டலத்தோடும், உளவியல் வல்லுனர்கள் உணர்வுகள் மற்றும் நுண்ணறிவுத் திறன்களோடும், கல்வியியலாளர்கள் கற்றலில் உள்ள நிறை குறைகளுடனும், மொழி வல்லுனர்கள் மொழித்திறன் பேச்சுத்திறன் என்பவற்றோடும் தொடர்புபடுத்துகின்றனர்.

ஆரம்பத்தில் கற்றலில் இயலாமைக்கான காரணத்தை அறியாத போது இதற்கு மூளைஊறு, உணர்வு ஊனம், நரம்புப் பாதிப்பு எனப் பலவித பெயர்களைச் சூட்டினர். மைக்கேல் பஸ்ட், மாஸ்வாண்ட், காஸ் போன்ற அறிஞர்கள் பேசுதல், படித்தல், எழுதுதல், கணிதம், அல்லது நாம் எதிர்பார்ப்பதை விட குறைவான திறமையைப் பெற்றிருத்தல், புரிந்து கொள்வது, விடயங்களை முறைப்படுத்துவது அல்லது தொடர்பு படுத்துவதில் குறைபாடு ஏற்படும் போது கற்றலில் குறைபாடு ஏற்படும் என குறிப்பிட்டுள்ளனர்.

பின்தங்கிய மாணவர்கள் மற்றும் மந்தமாக கற்பவர்களை கற்றலில் குழந்தையாகக் கருதுவது தவறு. ஆல்பர் ஐன்ஸ்டீன், தோமஸ் அல்வா எடிசன், உட்ரோ வில்சன் போன்ற மேதைகளும் கற்றலில் குறைபாடு உடையவர்களே. கற்றலின் பல பல கூறுகளில் ஏதேனும் ஒன்றிலோ ஒன்றிற்கு மேற்பட்டவற்றிலோ பிரச்சினை ஏற்படுவதால் இவ்வகை குழந்தைகளை ஆசிரியர் ஆரம்ப காலத்திலேயே இனங்கண்டு பல கலைத்திட்டத்தில் சிறு மாறுதல் மற்றும் பொருத்தப்பாடுகள் செய்தல் மூலமாக இவர்களை சாதாரண பாடசாலைகளிலேயே கல்வி பயிற்றுவிக்கலாம்.

கற்றலில் இயலாமை என்பதனை வாசித்தல் இயலாமை (dyaloxia), எழுதுதல் இயலாமை (dysgroiphia), கணக்குப் போடுவதில் இயலாமை (dyscalculia), எழுத்துக் கூட்டுவதில் இயலாமை, மொழி தொடர்பான இயலாமை, சிந்தித்தல் இயலாமை, செய்திகளைப் புரிவதில் இயலாமை என பலவகைகளாகப் பிரிக்கலாம்.

வாசித்தல் இயலாமையுடைய பிள்ளைகள் ஆசிரியரின் பார்வையை தவிர்ப்பதற்காகவும், வாசிப்பதில் தயக்கம் உடையவர்களாகவும், விட்டு விட்டு வாசிப்பவர்களாகவும், இல்லாத சொற்களை சேர்த்து வாசிப்பவர்களாகவும், தவறான உச்சரிப்பு உடையவர்களாகவும், வாய் திக்குபவர்களாகவும் காணப்படுவர், எழுதுதலில் குழந்தைகள் பல தவறுகளைச் செய்கின்றனர். பென்சிலைச் சரியாகப் பிடிக்கத் தெரியாமை, எழுதும் போது பின்புறமாக எழுதுதல், எழுத்துக்களை மாற்றி எழுதுதல், அதிக நேரம் எடுத்தல் போன்ற இயல்புகளைக் கொண்டிருப்பார். கணிதத்தில் மனக்கணிதம் இயலாமை, எண் குறியீடுகளை சரியாக இடாமை, எண்களை தலைகீழாக

எழுதுதல் (6 9), எண்களின் மதிப்பு தெரியாமை போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றன.

எழுத்துக்களை கூறும் போது எழுத்துக்களின் வரிசையை மாற்றுதல் Was – saw எழுத்துக்களின் உச்சரிப்பை முறைப்படுத்த இயலாமை, சாதாரண வார்த்தைகள் கூட நினைவில் வைக்க முடியாமை, மெய் எழுத்துக்களை பயன்படுத்துவதில் தெளிவின்மை, கையெழுத்து மிக மோசமாக காணப்படுதல், எழுதுவதை தவிர்க்க முயற்சித்தல் போன்றனவாகும். இவற்றின் மூலம் கற்றலில் குறைபாடுடைய மாணவர்களை இனங்காண முடியும்.

**கற்றல் இயலாமையுடைய பிள்ளைகள் தொடர்பான ஆசிரியர்கள் பங்களிப்பு**

கற்பதில் இயலாமையுடைய மாணவர்களைக் கண்டறிந்த பின்னர் அதனை நீக்குவதற்கும் குழந்தைகளிடம் உள்ள திறன்களை வளர்ப்பதற்கும் ஆசிரியர் முயற்சிக்க வேண்டும். அந்த வகையில் இக்குழந்தைகளுக்கு குழந்தையின் திறனை அதிகப்படுத்துவதற்கான விளையாட்டுக்கள், எழுத்துக்கூட்டும் திறனை அதிகப்படுத்தக் கூடிய விளையாட்டுக்கள் பார்த்துச் சொல்லுதல், கதை சொல்லுதல் நாடகம் நடித்தல் போன்ற பல உத்திகளை கையாள முடியும். மேலும் படங்கள், விளக்க அட்டைகள் போன்றவைகளை கூடுதலாக பயன்படுத்துதல், வாசித்தல், எழுதுவதற்கு தேவையான முன் ஆயத்தத்துடன் பயிற்சிகளை அளித்தல், முன் மாதிரியை பின்பற்றச் செய்தல், குழந்தைகளின் குறைபாடுகளை அடையாளம் காண்பதற்கு வல்லுனர்கள், உளவியல் நிபுணர்கள், ஆதார ஆசிரியர்கள் ஆகியோரின் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், கல்விப் பயணங்களை மேற்கொள்ளல் போன்றவற்றின் மூலம் குறைபாடுகளை களைவதற்கு உதவ முடியும்.

கற்றலில் குறைபாடுள்ள மாணவருக்கு உதவுவதில் ஆசிரியரின் பொறுப்பு மகத்தானது. ஆசிரியரின் தனிக்கவனம் இக்குழந்தைகளுக்கு தேவை என்பதை மறந்து விடக்கூடாது. கற்றலில் பிரச்சனையுள்ள குழந்தைகளின் தேவைகளை அறிவதற்கு வகுப்பாசிரியருக்கு உளவியல் வல்லுனர்களின் உதவி உறுதுணையாக இருக்கின்றது. அறிவு பெறுவதை விட தகுதி பெறுவதே மிகவும் முக்கியமானதாகும். மாணவர் மையக்கற்றலின் படி அனைத்துக் குழந்தைகளுக்கும் சம வாய்ப்புக்கள் வழங்கும் போது கற்றல் இயலாமை உடையவர்களை ஒதுக்கி விட முடியாது. எப்பொழுதும் பெருக்கெடுத்து வரும் அறிவு வெள்ளத்தின் சவால்களைச் சந்திக்க பிள்ளைகளை தயார்ப்படுத்த கற்றல் உண்மையானதாகவும் பயனுள்ளதாகவும் அமைதல் வேண்டும். குழந்தைகளைக் கவனிப்பதற்கான உத்திகளில், அதிகப்படுத்துவதற்கான விளையாட்டுக்கள் (attention games), எழுத்துக்கூட்டுத் திறனை அதிகப்படுத்தக் கூடிய விளையாட்டுக்கள் (spelling games) போன்றன மூலமும் தயார்படுத்திக் கொள்ளலாம்.

**கற்றல் இயலாமையிலுள்ள குழந்தைகளின் வளர்ச்சியில் உளவியலாளர்களின் பங்களிப்பு**

கற்றல் குறைபாடுகள் உளவியல் பிரச்சினைகளினால் ஏற்படுகின்றன. இக்குறைபாடுகள் வாழ்க்கையுடன் தொடர்புடையன. குழந்தைகளின் மனநிலை விருப்பு வெறுப்புக்கள், மனப்போக்குகள் பற்றி அறிந்தால் தான் கல்வி நிகழ்ச்சிகளைத் திட்டமிட முடியும். உளவியல் குழந்தைகளின் நடத்தையை விளக்குகின்றது. இயலாநிலைக் குழந்தைகளும் குழந்தைகளே என்பதை எப்போதும் மறந்து விடக்கூடாது. கற்றலில் குறைபாடுகள் ஓரளவு உளவியல் பிரச்சினைகளால் ஏற்படுகின்றன. உளவியல், குழந்தையின் வாழ்க்கையுடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. இயலாநிலைக் குழந்தைகளின் இயல்புகளுக்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு பாடசாலைகளில் பாடங்களை மாற்றி அமைத்தல். கற்றலில் ஏற்படும் இடர்பாடுகள் அவற்றிற்கான காரணங்கள், அவற்றை நீக்கும் வழிகள், பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்குதல் என்பவற்றை எடுத்துக் கூறுகின்றது உளவியல் ஆகும்.

குழந்தைகளின் வளர்ச்சியை விரிவுபடுத்துவதற்கும் உணர்ச்சி, ஆர்வ மனப்பான்மைகளை சிறந்த முறையில் வெளிப்படுத்துவதற்கும் பயிற்சி அளித்தலுக்கும் ஆசிரியருக்கு

உளவியல் துணை புரிகின்றது. புதிய கருத்துக்களை தேடியறிதல், புதிய அணுகுமுறையினை அறிமுகப்படுத்தல் போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இவர்களுக்குரிய கல்வியில் சம வாய்ப்புக்கள் அவசியமாக இருக்கின்றது. இன்றைய சூழ்நிலையில் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இன்றைய கல்வி குழந்தைகளை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றது. குழந்தையின் தன்மை, வளர்ச்சிப்படிகள், உணர்ச்சித் தேவைகள் என்பவற்றை ஆராய்ந்து செயற்படுவதற்கு, குழந்தைகளின் தனிப்பண்புகளுடன் அவர்களது குடும்பம் சமுதாய சூழ்நிலைத் தன்மைகள் ஆகியவற்றை அறிந்து கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு உளவியல் அறிவு கட்டாயம் தேவைப்படுகின்றது.

விருப்புச் செயன்முறைகளை ஒழுங்குபடுத்துதல் குழுச்செயல் முறைகளை திட்டமிடுதல், மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்த்தல், அறிவுரை கூறுதல், வழிகாட்டல் உற்சாகம் தரக்கூடிய வகுப்புச் சூழ்நிலைகளை உருவாக்குதலில் உளவியலாளரின் பங்கு அதிகம் தேவைப்படுவதுடன் ஆசிரியர்களுக்கும் தேவையாக உள்ளது.

1. கற்றல் குறைபாடுள்ள பிள்ளைகளுக்கு கற்பித்தலில் தங்களது அனுபவங்களை உளவியலாளருடன் கலந்துரையாடுதல்.
2. கற்றல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவியை நாடுதல்.
3. குழந்தைகளை மதிப்பீடு செய்தல்
4. குழந்தைகளுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தல்
5. பிரச்சினையின் தன்மை அறிந்து செயற்படுதல்
6. பெற்றோருடன் விவாதித்தல், தக்க ஆலாசனை வழங்குதல்
7. குழந்தைகளின் தவறான நடத்தைகளை அறிந்தால் தூய்மைப்படுத்தும் பணியல் ஈடுபடுத்துதல்.

இவ்வாறான உளவியல் தேவைகளை நிறைவு செய்ய முயற்சிக்க வேண்டும். எனவே தான் கற்றலில் பிரச்சினை உள்ள குழந்தைகளுக்கு தக்க கவனம் எடுத்து செயற்படுத்த ஆசிரியர்கள் முன்வருதல் அவசியமாகின்றது. அத்துடன் ஒவ்வொரு குழந்தைகளும் வரையறுக்கப்பட்ட கற்றல் விளைவுகளை பெறுவதே குறிக்கோளாக கொண்டு அமைவதுடன் சமூகத்தில் ஒரு உறுப்பினர்களாக வாழ்வதற்கான அங்கிகாரத்தினையும் பெற்றுக் கொள்வதற்கு உரிய சிகிச்சைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

# 07. உளவியல் இடையீட்டினால் மாற்றுவலுவுள்ளவர்களுக்கு தீர்வு

**அருட்பணி S.J இராஜநாயகம்.**
**உளவியலாளர், யாழ்ப்பாணம்.**



உளவியலாளர் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு உதவ முடியும். இவர்கள் பல பிரிவினராக காணப்படுகின்றனர். இவர்களில் அங்கவீனரை மட்டும் நான் இங்கு எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். இவர்கள் இயற்கையாகவோ அதாவது பிறப்பில் இருந்தோ அங்கவீனர்களாக இருக்கலாம். அல்லது செயற்கையாக விபத்தின் முலமாக இந்த நிலைக்கு வந்திருக்கலாம்.

முதன்முறையாக அல்லது புதிதாக இந்த நிலைக்கு உள்ளாகின்றவர்கள் நெருக்கீடுகளைச் சந்திக்கின்றனர். இதனால் வாழ்க்கையில் மாற்றங்கள், மதிப்பீடுகள், வாழ்வில் இயலாமை என்பவற்றை சந்திக்கின்றனர். சமுக ரீதியாக பார்க்கும்போது ஒருவர் தான் வாழும் குடும்பத்தில் சமூகத்தில் எப்படியான வகிபாகத்தில் ஈடுபடுதல் தன்குணாதிசயங்கள் மற்றவர்கள் மத்தியில் தன்னை வெளிப்படுத்தும் விதங்கள் என்பவற்றுக்கு ஒருவர் தன்னை இசைவாக்கிக் கொள்ளுதல் என்பவற்றுக்கு ஒரு தேர்ச்சி பெற்றவர் உதவ முடியும். இதன் காரணம் யாதெனில் பாதிக்கப்பட்டவரின் வாழ்வு பலவிதமான மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஒருவர் தன்னையும் தமது மதிப்பீட்டையும் இப் புதிய நிலைக்கு தொடர்ந்து இசைவாக்கி கொள்ளுதல் வேண்டும்.

விபத்து மூலம் ஒருவர் அங்கவீனர் ஆக்கப்பட்டால், அவரின் நிலை என்பது, தன் வாழ்வில் தான் அன்பு செய்து வந்தவரை இழந்ததற்கு ஒப்பாகும். அதனால் வருகின்ற துக்கம், இசைவாக்கிக் கொள்ளல் என்பன 04 படிமுறைகளாகப் பிரிக்கலாம்.

**01ம் படிமுறை: அதிர்ச்சியடைதல் (shock)**

இது உணர்வெழுப்ப ரீதியாகவும், உடல் ரீதியாகவும் செயற்பட முடியாத நிலை. இந்நிலையானது சில மணி நேரம் தொடக்கம் பல நாட்கள் வரை நீடிக்கும்.

**02ம் படிமுறை: மறுத்தல் (denial)**

இது ஒரு தற்காப்புக் கவசம். தன் உண்மையான நிலையை ஏற்காது இருத்தல். இதனால் ஒருவர் மருத்துவரிடமும், மறுவாழ்வளிக்கும் இடத்திற்கும் செல்லாது மறுப்பார்.

**03ம் படிமுறை: கோபம் / மனச்சோர்வு (anger / depression)**

இந்த நிலையில் ஒருவர் தன் இழப்பை முன்னிட்டுக் காட்டும் ஒரு எதிர் செயல்பாடு (reaction) இது தன்னுடைய சமூக நிலையில் ஒரு மாற்றம் ஏற்படுவதாலும், சமுதாயம் தன்னை வேறுவிதமாக நடத்துவதால் வரும் எதிர் செயற்பாடாக இருக்கலாம்.

உதாரணம்: தனது உடல் தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றம், இதனால் ஏற்படுகின்ற துக்கம், தானாக இயங்க முடியாமை, தான் எண்ணியிருந்தவை எல்லாம் இழந்த நிலை, தனது நடமாட்டத்தால் திருப்தியடைந்த நிலையை இழத்தல் போன்றன இந்நிலையை ஏற்படுத்தலாம்.

**04ம் படிமுறை: இசைவாக்கல் / ஏற்றல்**

இசைவாக்குதல், ஏற்றுக் கொள்ளுதல் என்பதால் ஒருவர் இப்போது இருக்கின்ற நிலையால் மகிழ்ச்சியாய் இருக்கின்றார் என்பதல்ல. இது பொய்மையான நம்பிக்கைகளை தகர்த்தெறிந்து, தனது உண்மையான ஆற்றலுக்குரியவற்றை கண்டு பிடித்து, தனது வரையறைகள் எவை என்பனவற்றைக் கண்டு பிடித்து அதனால் பயனடைந்து வாழ்வில் முன்னேறிச் செல்வதாகும். உணர்வெழுப்பக் காரணி மறுவாழ்வின் விருத்திக்கு மிகவும் முக்கியமானதாகும். இதனால் ஒருவர் நேர்மறையாகச் செயல்பட்டால் முன்னேற்றத்திற்கான வழிவகைகளைக் கண்டு அனுபவிப்பர். வெகு விரைவாக சுக நலமாக வாழ்வர். இந்த வகையில் அநேகர் மேலே குறிப்பிட்ட 04 நிலைகளை விட கூடிய நிலைகள் ஊடாக பயணிப்பர்.

- அதிர்ச்சி
- மனக்கலக்கம் / பதட்டம்
- பேரம் பேசுதல்
- மறுத்தல்
- துக்கமடைதல்
- மனச் சோர்வு
- ஆட்களிலிருந்து விலகுதல்

- கோபத்தை உள்வாங்குவர்
- கோபத்தை வெளிக்காட்டுதல்
- அறிவு பூர்வமாக புரிந்து கொள்ளுதல்
- ஏற்றல்
- தன்னிலைக்கேற்ப தன்னை இசைவாக்குதல்

**அங்கவீனர் - நீங்கள் எப்போதும் நீங்களே**

ஒருவரை அங்கவீனம் மாற்றாது. மாறாக நீங்கள் யார் என்பதன் கருத்துருவுக்கு சவால்விடும். அங்கவீனர்கள் தாம் வரும் போது கலவையான நம்பிக்கைகள், மனப்பாங்குகள், திறன்கள், ஒருவரை தன்பால் ஈர்த்து ஆற்றக்கூடிய பண்பு, பயம் அல்லது சமூகத்திறன்கள் இவைகள் மூலம் அங்கவீனத்தை தனது திறன்களுக்கு ஏற்ற மாதிரி மாற்றி அமைத்து தன்னை இசைவாக்கிக் கொள்வர்.

ஒரு உளவியலாளர் ''நான் எப்படி உமக்கு உதவ முடியும்''? என்று கேட்பதற்குப் பதிலாக அவர் இவருக்கு அங்கவீனராக ஆக்கப்படுவதற்கு முன் இருந்த நிலை பற்றி அறிவது நல்லது. பாதிக்கப்பட்டவர் பலவீனராகவோ, பலம் கொண்டவராகவோ எதிர் பார்க்க வேண்டாம். முன்னரை விட புதிய திறமைகள் மேல் வருவதை இட்டும் ஆச்சரியப்பட வேண்டாம். அங்கவீனராக இருந்து கொண்டிருக்கும் நிலையில் ''தான் யார்'' என்று அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும். அங்கவீனர்கள் தங்கள் அனுபவத்திலிருந்து கொண்டு அவர்கள் தங்களிலேயே தாம்யார் என்று அறிந்து கொண்டதில் பெருமையடைவர். **உதாரணம். ''என்னால் சில வேலைகளை நானாகவே செய்ய முடியும்''** என்பதனையிட்டு பெருமைப்படுவர். அங்கவீனம் தங்களுடைய மதிப்பீடுகளை பாராட்ட உதவுகின்றது.

பல உளவியல் இசைவாக்கங்கள் அங்கவீனர் அனுபவிக்கின்ற அனுபவங்களில் சிறிய தாக்கங்களைத் தான் செய்ய முடியும் **உதாரணம். ஒருவர் தன்னை அன்பு செய்பவரைத் தேடி அலைந்து கடைசியாக ஒருவரும் இல்லாமல் மனச்சோர்வடைவர்**. இதனால் தனிமையை அனுபவிப்பார். மொத்தமாகப் பார்க்குமிடத்தில் (அங்கவீனம் இருப்பவருக்கும், இல்லாதவர்க்கும்) இது எல்லோருக்கும் பொதுவான அனுபவமாக இருக்கின்றது. எனவே அங்கவீனம் தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று நினைப்பது தவறு.

அங்கவீனம் ''நான் யார்''? என்பதனைத் தீர்மானித்துவிடக்கூடாது. ஒருவகையில் நாம் எல்லோரும் அங்கவீனர்களே! நாம் எல்லோரும் ஒன்றாக சமாதானமாக இருக்க முடிவதில்லை. இங்கே நாம் ஒரு கேள்வியை எழுப்பலாம். எம்மில் யார் ''இயல்பு நிலையில்'' (normal) இருக்கின்றோம்? இயல்பு நிலை என்றால் என்ன?

**புதிய அங்கவீனத்தின் அனுபவம்**

எல்லோரும் அங்கவீனம் என்பது பற்றி எதிர்மறையாகத் தான் கருதுகின்றார்கள்.

உதாரணம். ஒரு அங்கவீனமுடையவர் சக்கர நாற்காலியில் திரிகின்றார் எனின் அவர் மிகவும் கஸ்டப்படுகின்றார் என்றுதான் இயல்பாக சிலர் நினைப்பர். ஆனால் அந்த நாற்காலியைப் பாவிப்பவரின் அனுபவம் நேர்மயமானதாக இருக்கும்.

ஒருவர் அங்கவீனத்திற்கு உள்ளாகும் போது ஏற்கனவே வைத்திருக்கின்ற எதிர்மறையான எண்ணத்துடன் இருப்பர். அதனால் அவர்கள் மேற்கூறப்பட்ட கோபம், பதட்டம், அங்கலாய்ப்பு, இழப்பு என்ற பல பிரச்சினைகளுக்கு ஆளாவர். அங்கவீனம் ஒருவரை ஆட்டம் காண வைத்துவிடும். இங்கு இத்தகைய புது அனுபவங்களை எதிர் கொள்ளுகின்ற திறன்களைப்பற்றி பேசுவது மிகவும் சிறப்பானதாக இருக்கும்.

புதிதாக அங்கவீனத்திற்கு ஆளாகும் ஒருவர் எதிர்மறை உணர்வுகளால் ஆக்கிரமிக்கப்படுவர்.

உதாரணம். எதிர்மறை உணர்வுகள், ஒன்றும் செய்ய முடியாத நிலை, குழப்பம் இன்னும் பல.

இந்த நிலையில் மிகவும் முக்கியமானது நம்பிக்கையை எதிர்நோக்குவது அதாவது இந்தச் சூழலை என்னால் சமாளிக்க முடியும் என நினைத்தல் என்ற நேர்மையான எண்ணம். இது ஒரு சவாலான நிலை. சசல மாற்றுத்திறனாளிகள் ஆரம்பத்தில் முடியாது என்று நினைத்தவர்கள் இப்போது நன்றாகச் செயல்ப்படும் போது மிகவும் உற்சாகத்துடன் செயல்ப்படுகின்றனர். நேர்மையான ஆதரவு, நண்பர்கள், சமூகம் இவைகள் எல்லாம் சேர்ந்து மாற்றுத்திறனாளிகளை உற்சாகப்படுத்துவதன் மூலம் அவர்களை நல்ல நிலைக்கு இசைவாக்குவார்கள்.

ஒருவர் திடீரென மாற்றுத்திறனாளியாக ஆக்கப்படும் பொழுது அவர் ஏற்கனவே தன் நினைவில் வைத்திருந்த இவர்களின் இயலாமைகளை கொண்டு வருகின்றனர். இதனால் அவர்கள் கோபம், மனச்சோர்வு, பயம், பதட்டம், இழப்பு என்பவற்றை ஆரம்பத்தில் கொண்டு விடுகின்றனர். இது அவர்களை அவர்களுடைய நம்பிக்கை வாழ்க்கை என்பவற்றை ஆரம்பத்தில் ஆட்டம் காண வைக்கின்றது. இத்தருணத்தில் அவர்கள் வலிமையை ஒன்று கூட்டி தமது ஈடுகொடுக்கும் திறனை வெளிக்காட்டி சமாளித்தல் பேருதவி ஆகும். இந்த சவால் கொடுக்கும் அனுபவத்தின் மூலம் சிலர் நம்ப முடியாத அளவுக்கு தம்மை இசைவாக்கி மாற்றிக் கொண்டு தம் வாழ்வில் முன்னேறுவர்.

# 08.சமூகம்சார் புனர்வாழ்வின் அறிமுகமும் இலங்கையின் அதன் நிலைப்பாடும்

**திரு.வெ.சுப்பிரமணியம்.**



1784 இல் வெலன்டயி ஒஹி என்பவரால் பிரான்ஸ் தேசத்தில் விழிப்புலனற்றோருக்கான முதல் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது கல்வியின் ஊடாக வலுவிழப்புடன் கூடிய நபர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க முடியும் என்ற எண்ணக்கரு வலுப்பெற்றது எனலாம். இதனைத் தொடர்ந்து உலகெங்கும் வலுவிழப்புடன் கூடிய நபர்களுக்காக பற்பல கல்விக் கூடங்களும் தொழிற்பயிற்சி நிலையங்களும் காப்பகங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு குறித்த ஒரு நிலையத்தை மையமாகக் கொண்டு அதன்பால் ஈர்க்கப்பட்ட வலுவிழப்புடன் கூடியநபர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டது. இம்முறை காலப்போக்கில் நிலையம்சார் புனர்வாழ்வு என அழைக்கப்பட்டது.

எனினும் 1960களில் நிலையம்சார் புனர்வாழ்வில் காணப்பட்ட பலவீனங்கள் வெளித்தோன்றத் தொடங்கின. குறிப்பாக 1ஆம் 2ஆம் உலக மகாயுத்தங்களின் விளைவாக தோற்றம் பெற்றிருந்த வலுவிழப்புடன் கூடிய நபர்களின் உயர் எண்ணிக்கைகளுக்கு புனர்வாழ்வளிக்க நாடுகளில் காணப்பட்ட நிலையங்கள் போதுமானதாக இருக்கவில்லை. 2 ஆம் உலக மகா யுத்தத்தை தொடர்ந்து எழுச்சி பெற்ற மனித உரிமை எண்ணக்கருக்கள் இத்தகைய புனர்வாழ்வு ஓர் உரிமை மீறலாகும் என்ற கணிப்பையும் கொண்டு வந்தன. அதாவது வலுவிழந்த ஒருவர் அவர் புனர்வாழ்வு பெறுவதற்காக தனது பிறப்பிடத்திலிருந்து நீண்ட தொலைவில் உள்ள புனர்வாழ்வு நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட வேண்டியிருந்தமை அவர் தனது வாழ்விடத்திலுள்ள வளங்களை தான் பிறந்த சமூகத்துடன் இணைந்து அனுபவிக்கும் உரிமையை மறுக்கும் ஒன்றாகும் என உணரப்பட்டது. இத்தகைய பிரிப்பு அவரது அல்லது குடும்ப அங்கத்துவர்களின் ஒப்புதலற்ற புனர்வாழ்விற்கும் காலதாமதமான புனர்வாழ்விற்கும் இட்டுச் சென்றது என்றே கூறவேண்டும். நிலையம்சார் புனர்வாழ்வில் காணப்பட்ட இக்குறைபாடுகள் காரணமாக 1960களில் எழுச்சி பெற்ற சமூகம்சார் புனர்வாழ்வு எண்ணக்கரு 1970களில் உத்வேகம் பெறத்தொடங்கியது.

இவ்வாண்டுகளில் CBR முன்னோடித்திட்டங்கள் ஆபிரிக்கா, ஆசியா, தென்னமெரிக்கா போன்ற பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டன. 1974ஆம் ஆண்டு Mr. Einar Helander என்பவரால் எழுதப்பட்ட WHO manual என அறியப்படும் வலுவிழப்புடன் கூடியவர்களுக்கான சமூகத்தில் பயிற்சி (Training in community for persons with disability) என்ற WHOவின் முதலாவது CBR கொள்கை ஆவணம் வெளியிடப்பட்டது. 1978ம் ஆண்டில் Alma – Ata பிரகடனத்தை தொடர்ந்து 1978இல் WHOவினால் CBR திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

WHO manual இன் புதுப்பித்த பதிப்பு 1989இல் வெளிப்பட்டது. 1991 Queens பல்கலைக்கழகத்தில் உயர் CBRக்கான சர்வதேச நிலையம் (International Center For Advanced CBR) ஆரம்பிக்கப்பட்டது. 2003இல் பின்லாந்தில் நடைபெற்ற CBR மீளாய்வு ஆலோசனை மாநாட்டில் CBR வழிகாட்டல்களை விருத்தி செய்வதற்கான சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டன. அன்று தொட்டு இன்றுவரை CBR திட்டம் உலகெங்கும் வியாபிக்கத் தொடங்கியுள்ளது.

சமூகம்சார் புனர்வாழ்வு என்றால் என்ன என்ற வினா எவர் மனதிலும் எழுவது இயல்பு. வலுவிழப்புடன் கூடிய ஒரு நபரை அவரின் பிறந்த சமுதாயத்தை விட்டு பிரித்தெடுத்து பிறிதோர் இடத்தில் புனர்வாழ்வளிப்பதற்கு எதிர்மாறாக அவ்வாறு அவரைப் பிரித்தெடுக்காது அச்சமூக சூழலுக்குள்ளேயே புனர்வாழ்வளிக்கும் பொறுப்பை அச்சமூகமே ஏற்றுக்கொள்ளும் ஒரு முறைமையே CBR ஆகும். உதாரணமாக விழிப்புலனற்று பிறந்த ஒரு பிள்ளைக்கு கல்வி வழங்க தூர இடத்தில் அமைந்துள்ள விழிப்புலனற்றோருக்கான பாடசாலைக்கு அனுப்பாது அவரது கிராமத்து பாடசாலையிலேயே ப்ரையில் பயிற்சி பெற்ற ஆசிரியரின் உதவியுடன் கல்வி கற்க வாய்ப்பளித்தலை குறிப்பிடலாம்.

இப்புனர்வாழ்வின் மூலம் ஒரு நிலையம் சார்ந்து வழங்கப்பட்ட புனர்வாழ்வு, சமூகம் சார்ந்ததாக மாற்றம் பெற்றது. இதன் வாயிலாக சேவை வழங்குனரைத் தேடி பயனாளி செல்லும் நிலை மாற்றப்பட்டு பயனாளியை நோக்கி சேவை வழங்குனர் செல்லும் நிலை தோன்றியது. பயனாளிக்கு வழங்கப்பட்ட சேவை அறப்பணி சார்ந்த (Charity base approach) அணுகுமுறையிலிருந்து உரிமை சார்ந்த அணுகுமுறைக்கு (Right Based) மாற்றப்பட்டது. இதனால் வலுவிழப்புடன் கூடிய நபர்கள் பயனாளிகள் (Beneficiaries) என்ற தகைமையில் இருந்து உரிமை உடையவர்கள் (right holders) என்ற தகைமைக்கு உயர்த்தப்பட்டனர். அனுதாபத்தின் (Sympathy) அடிப்படையில் இதுவரையில் நடந்து வந்த புனர்வாழ்வு நடவடிக்கைகள் உணர்வு (Empathy) அடிப்படையில் மாறின. வலுவிழப்புடன் கூடியவர்களுக்கு புனர்வாழ்வழிக்கும் பொறுப்பு நிறுவனங்களிடமிருந்து அந்தந்த சமூகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. எனினும் 1990களில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட CBR திட்டம் அதற்குரிய இலக்குகளை அடைவதில் அதாவது வலுவிழப்புடன் கூடிய நபர்களுக்கு ஒட்டுமொத்த புனர்வாழ்வளிக்கும் இலக்கை இற்றைவரை எந்தளவு தூரம் எட்டியுள்ளது என்று சீர்தூக்கி பார்க்க வேண்டியுள்ளது. பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்துள்ள இலங்கை CBR திட்டம் அதன் இலக்கை நோக்கிய பயணத்தில் பெருந்தடைகளை எதிர்நோக்கியுள்ளது என்பது உண்மை. அத்தகைய தடைகளில் ஒரு சிலவற்றையேனும் இங்கு சுட்டிக்காட்டுதல் சாலவும் பொருந்தும்.

வலுவிழப்புடன் கூடிய நபர்களின் குடும்ப அங்கத்தவர்களினதும், பெற்றோர்களினதும் வலுவிழப்புடன் கூடிய நபர்கள் தொடர்பான எதிர்மனப்பாங்கு இன்னமும் துடைத்தெறியப்படாமை இத்திட்டத்திற்கு பெரியதொரு சவாலாகும். கிராமிய மட்டத்தில் சேவைகளை வழங்குவதற்கும், பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணுவதற்கும் அமைக்கப்படும் சமூகம்சார் புனர்வாழ்வு குழுக்கள் (CRC) கிராமிய சேவையாளர்களின் கிராமத்து பிரமுகர்களினதும் ஒத்துழைப்பு கிட்டாமல் செயற்பாடு தேக்கமடைந்துள்ளது. இத்திட்டத்தின் முதுகெலும்பாக விளங்கும் CBR தொண்டர்கள் போதிய பயிற்சியும் ஊக்குவிப்பும் இன்றி திட்டத்திலிருந்து இடைவிலகிச் செல்லும் போக்கு தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றது. திட்டத்தை நடைமுறைப்படுத்த பொறுப்பு வாய்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வளப்பற்றாக்குறை காரணமாக திட்டத்தை பெயரளவில் நடைமுறைப்படுத்தும் முகவர்களாக மாறிவருகின்றனர்.

திட்டத்தின் தேசிய அமுலாக்கத்திற்கு பொறுப்பாகவுள்ள சமூகசேவைகள் அமைச்சின் திட்டமானது 331பிரதேச செயலாளர் பிரிவுகளில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிக்கையிடுகின்ற பொழுதிலும் எத்தனை பிரதேச செயலாளர் பிரிவுகளில் CBR பிரதேச பின்புலக் கூட்டம் ஒழுங்கான ரீதியில் நடைபெறுகின்றன என்பது கேள்விக்குறியே. 25 மாவட்ட பின்புலக் குழுக்களையும் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களின் தலைமையில் கூட்டுவதற்கு மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர்கள் எடுக்கும் முயற்சிகள் போதுமானதாகத் தெரியவில்லை.

கட்டமைப்பின்படி மாவட்டங்களில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை கலந்துரையாடுவதற்கு தேவையான அடுத்தகட்ட மாகாண மட்டத்திற்கு எடுத்துச் செல்ல

CBR மாகாண பின்னுபுலக் குழுக்கள் எவையும் அமைக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ள மற்றுமொரு இடர்பாடாகும். தேசிய CBR வலைப்பின்னல் குழு ஒன்று சமூகசேவைகள் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் தேசிய CBR திட்ட மீளாய்வு பயனுறுதி வாய்ந்த முறையில் நிகழவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

குடும்பமட்டம், கிராமியமட்டம், பிரதேசமட்டம், மாவட்டமட்டம், மாகாணமட்டம், தேசிய மட்டம் ஆகியவற்றைக் கொண்ட உள்ளக CBR கட்டமைப்பு உறுதியற்ற நிலையைக் கொண்டிருப்பதால் இவ்வுள்ளக CBR கட்டமைப்பை தெற்காசிய வலைப்பின்னல் போன்ற பிராந்திய வலைப்பின்னல்களுடனும் (Regional CBR Network) இறுக்கமாக ஒருங்கிணைப்பு செய்யமுடியாத நிலையே தோன்றியுள்ளது. எது எவ்வாறாயினும் இத்திட்டம் வலுவிழப்புடன் கூடிய நபர்களுக்கு புனர்வாழ்வளிக்க மிகச்சிறந்த ஒரேஒரு மூலோபாயம் என்பதை சர்வதேசசமூகம் ஏற்றுக் கொண்டுள்ளமையால் மேற்கூறப்பட்ட தடைகளை தகர்த்தெறிந்தாலே ஒழிய இலங்கை ஒரு வினைத்திறன் மிக்க CBR திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்பது பகற் கனவாகவே அமையும். இத்தடைகள் தகர்த்தெறியப்படின் வலுவிழப்புடன் கூடிய நபர்கள் புனர்வாழ்வு என்னும் இலக்கை நோக்கிய பயணம் முற்றுப்பெறும்.

## 09. மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் இலங்கையில் காணப்படும் சட்ட ஏற்பாடுகள் - ஓர் பார்வை

**S. தருமதன்**

**சட்டத்தரணி**



சமத்துவமாக வாழும் உரிமையானது உலகளாவிய ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அடிப்படை மனித உரிமையாகும். இதனை ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனமும் உறுதிப்படுத்துகின்றது. எவ்வாறு இருப்பினும் இச்சமத்துவ உரிமையானது அனைத்து மக்களாலும் நடைமுறை வாழ்க்கையில் அனுபவிக்கப்படுகின்றதா? என்பது ஐயத்திற்குரியது.

உலகளாவிய ரீதியில் நலிவுற்ற ஒரு சமூகமாக மாற்றாற்றல் உடையவர்கள் காணப்படுகின்றனர். உலக சனத்தொகையில் 10% மானவர்கள் மாற்றுத்திறனாளிகள் ஆவர். இவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் உலகளாவிய ரீதியில் பல

சட்டரீதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 1983- 1992 வரையான காலப்பகுதியினை மாற்றுத்திறனாளிகளுக்கான தசாப்தமாக ஐ.நா சபையால் பிரகடனப்படுத்தப்பட்டு மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்களை ஆய்வுக்கு உட்படுத்தினர். அந்த வகையில் கல்வி, போக்குவரத்து, அரசியல், வேலைவாய்ப்பு, பொது வெளிகளில் பங்குபற்றுதல், தொடர்பாடல், சுகாதார நலவசதிகள் போன்ற பல்வேறு விடயப் பரப்புக்களில் மாற்றுத்திறளாளிகள் பின்தங்கிய நிலையில் காணப்பட்டமையை அறிந்து கொண்டனர். இதன் விளைவாக இச்சவால்களைக் களையும் நோக்கில் 2006ம் ஆண்டு ஐ.நா சபையினால் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்கான சமவாயம் (Convention on Right of person wih disability) உருவாக்கப்பட்டது.

எமது நாடாகிய இலங்கை அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகும். 65610 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பளவைக் கொண்ட இத்தீவில் 2011ம் ஆண்டு சனத்தொகைக் கணிப்பீட்டின் பிரகாரம் 20.4 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களில் 1617924 மக்கள் மாற்றுத்திறனாளிகளாகக் காணப்படுகின்றனர். மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்க எமது நாட்டிலுள்ள பல்வேறு நடவடிக்கைகளை அவதானிக்கலாம்.

இலங்கை ஜனநாயக சோசலிச மக்கள் குடியரசு அரசியல் அமைப்பானது சமத்துவ உரிமையினை அடிப்படை உரிமையாகப் பிரகடனப்படுத்தி இருப்பதனை அவதானிக்கலாம். அந்த வகையில் அரசியல் அமைப்பின் உறுப்புரை 12(1) ஆனது சட்டத்தின் முன் அனைவரும் சமம் எனவும் சட்டம் அனைவரையும் சமமான முறையில் பாதுகாக்க வேண்டும் எனவும் கூறுகின்றது. உறுப்புரை 12(2) ஆனது மொழி, இனம், மதம், தொழில், கலாச்சாரம், அரசியல் போன்ற காரணங்களுக்காக வேறுபாடுகளைக் காட்ட முடியாது எனப் பிரகடனப்படுத்துகின்றது. எவ்வாறு இருப்பினும் எமது அரசியல் அமைப்பானது பெண்கள் சிறுவர்கள் மாற்றுத்திறனாளிகளின் நன்மைகளுக்காக விசேட சட்டங்களை இயற்ற முடியும் எனவும் இதனை ஒரு வேறுபாடாகக் கருத முடியாது என பிரகடனப்படுத்துகின்றது. இதனை அரசியல் அமைப்பின் உறுப்புரை 12(4) உறுதிப்படுத்துகின்றது.

அரசியல் அமைப்பின் அத்தியாயம் 6 ஆனது அரச கொள்கைகள் வகுத்தல் பற்றி எடுத்துக் கூறுகிறது. அந்த வகையில் உறுப்புரை 27(2) (c) மற்றும் 27(9) ஆகியன அனைத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்த அரசு பணியாற்ற வேண்டும் என எடுத்துக் கூறுகின்றன. இங்கு ''அனைத்து மக்கள்'' எனக்குறிப்பிடுவதன் ஊடாக மாற்றுத்திறளாளிகளும் உள்வாங்கப்படுவதனை அவதானிக்கலாம். எனவே மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அரசு பணியாற்ற வேண்டும்.

இவ்வாறாக இலங்கை நாட்டின் அடிப்படைச் சட்டமாகிய அரசியல் அமைப்பில் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் தொடர்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதற்கு மேலதிகமாக பாராளுமன்றச்சட்டங்கள் ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்றுநிருபங்களின் ஊடாகவும் மாற்றுத்திறளாளிகளின் உரிமைகள் பாதுகாத்து மேம்படுத்துவதை அவதானிக்கலாம். அந்த வகையில் இலங்கைப் பாராளுமன்றமானது மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளைப் **பாதுகாக்கும்சட்டம்** இலக்கம் 28-1996 (Protection of person with Disability Act No 28 of 1996) உருவாக்கியது. இச்சட்டத்தின் பிரதான நோக்காக அமைவது மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்தலும், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசியசபையை உருவாக்குதலும் ஆகும். இதனை இச்சட்டத்தின் முன்னுரை உறுதிப்படுத்துகின்றது.

இச்சட்டத்தினை நோக்குமிடத்து பிரிவு 37ஆனது பொருள்கோடல் பகுதியாக அமைகிறது. இதில் மாற்றுத்திறனாளிகள் என்ற சொல் வரைவிலக்கணப்படுத்தபடுவதனை அவதானிக்கலாம். மேலும் பிரிவு 2ஆனது மாற்றுத்திறளாளிகளுக்காக தேசியசபையின் உருவாக்கம் பற்றி எடுத்துக் கூறுவதோடு பிரிவு 3ஆனது இச்சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றியும் பதவிக்காலம் பற்றியும் எடுத்துக்கூறுகின்றது. அந்த வகையில் 21உறுப்பினர்கள் 5ஆண்டுகளுக்காகப் பதவி வகிக்கலாம். மேலும் பிரிவு 12ஆனது இச்சபையின் பிரதான பணியாக

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை விருத்தி செய்து பாதுகாத்து மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் எனக் கூறுகின்றது.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரதான பிரிவாக அமைவது 23ம் பிரிவாகும். இப்பிரிவில் மாற்றுத்திறனாளிகளுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற வேறுபாடுகளை களையும் முகமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் வேலைகளுக்காக ஆட்களைச் சேர்த்தல், கல்வி நிறுவனங்களில் கற்றல் நடவடிக்கைகளுக்காக மாணவர்களை உள்வாங்குதல் போன்ற நடவடிக்கைகளின் போது மாற்றுத்திறனாளி என்ற காரணத்திற்காக அவர்களை இணைக்காது விட முடியாது எனவும், மேலும் மாற்றுத்திறனாளி ஒருவர் தான் மற்றைய சாதாரண நபர்களைப் போல அரச நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புக்களில் அணுகுவதற்குரிய அனைத்து வசதிகளையும் மேற்கொண்டிருத்தல் வேண்டும் எனவும் கூறுகின்றது. அந்த வகையில் மேற்கூறப்பட்ட 23வது பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் மாற்றுத்திறனாளி ஒருவர் அரசியல் அமைப்பின் உறுப்புரை 154(p) யின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண மேல் நீதிமன்றுக்கு மனு மூலம் விண்ணப்பித்து நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறாக உருவாக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் தேசியசபையின் மேற்பார்வையில் 2003ம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசியகொள்கை வெளியிடப்பட்டது. அக்கொள்கையில் பல்வேறு புதிய விடயங்கள் உள்வாங்கப்பட்ட போதிலும் நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் இக்கொள்கையினை நீதி மன்றத்தினால் வலுப்படுத்த முடியாமை போன்ற காரணங்களினால் செயலற்றதாகவே காணப்படுகின்றது. மேலும் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் பாதுகாப்புச்சட்டம் தொடர்பாக போதியளவு விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் நடைமுறையில் வலுவற்ற சட்டமாகவே காணப்படுகின்றது.

கல்வித்துறையைப் பொறுத்தவரையில் 1972ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கல்விக் கொள்கையினூடாக குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த மாற்றுத்திறனாளிகள் சாதாரண பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளுக்காக உள்வாங்கப்பட்டனர். இதனை மேலும் வலுப்படுத்தும் முகமாக 1997ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட உட்படுத்தல் கல்விக் கொள்கையூடாக அனைத்து மாற்றுத்திறனாளிகளும் சாதாரண பாடசாலைகளில் அனுமதிக்கப்பட வேண்டும் என பிரகடனப்படுத்தப்பட்டது. இவற்றைத் தவிர உயர்கல்வியைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளுக்கமைய அடிப்படைத் தகைமையுடைய குறிப்பிட்ட விகுதமான மாற்றுத்திறனாளிகள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அவர்களுக்குரிய சகல வசதிகளையும் அப்பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் எடுத்துக் கூறுகின்றது.

அரசாங்க நிர்வாக ஒழுங்கு விதி 1988ஆனது வேலைவாய்ப்பின் போது தகுதி உடைய 3%மான மாற்றுத்திறனாளிகள் உள்வாங்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றது. இதனை சமூகப் பாதுகாப்புச் சட்டம் 1996 உறுதிப்படுத்துகின்றது. மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கான அணுகுதல் ஒழுங்கு விதி இல.1 (2006) (Disability Regulation No:1-2006) ஆனது மாற்றுத்திறனாளி ஒருவர் எந்த ஒரு தடையுமின்றி பொதுக்கட்டடங்களை தாமாகவே அணுகிச் செயற்படுவதற்கு ஏற்றால் போல் கட்டடங்களை அமைத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது. இவ்விதி மீறப்பட்டதாக Dr. அஜித்பெரேரா vs சட்டமா அதிபர் என்னும் வழக்கு 2009ம் ஆண்டு இலங்கை உச்ச நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கின் தீர்ப்பானது 2019ம் ஆண்டு அவ் ஒழுங்கு விதியினை அமுல்ப்படுத்துமாறும், அவ்வாறு மீறப்பட்டால் அது அடிப்படை உரிமை மீறல் எனவும் கூறி உள்ளது.

மேற்குலக நாடுகளில் மாற்றுத்திறனாளியின் வாழ்க்கைத் தரமானது சிறந்த நிலையில் காணப்படுகின்றது. அவர்களின் உரிமைகள் அனைத்தும் சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டு நீதிமன்றங்களினால் வலுப்படுத்தக் கூடிய நிலைகளில்

காணப்படுகிறது. ஆனால் எமது நாட்டில் அவ்வாறான நிலமை காணப்படவில்லை. மாற்றுத்திறனாளிகள் தொடர்பில் போதுமானளவு சட்ட ஏற்பாடுகள் காணப்படவில்லை. மேலும் ஆங்காங்கே காணப்படுகின்ற ஒருசில சட்ட ஏற்பாடுகள் நடைமுறையில் வலுப்படுத்த முடியாதனவாகக் காணப்படுகின்றன. எனவே எதிர்காலத்தில் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் தொடர்பாக கவனத்தில் எடுத்து நடைமுறைப்படுத்தக் கூடிய சட்டவரைவுகளை மேற்கொள்வது இலங்கைப் பாராளுமன்றத்தின் அடிப்படைக் கடமையாதல் வேண்டும்.

## 10. இலங்கையில் விசேட கல்வி

**வி. விஸ்ணுகரன்**



மனிதர்களுக்கு ஆரம்பகாலம் முதல் இன்றுவரை பல்வேறு காரணங்களினால் உடல், ஊனம் ஏற்பட்டு வருகின்றது. தொடக்க காலங்களில் உடல் ஊனமுற்றவர்கள் நிலை மிகவும் பரிதாபத்துக்குரிய ஒன்றாவே இருந்தது ஆனால் காலப்போக்கில் இந்நிலை மாற்றம் அடைந்தனைக் காணமுடிகின்றது.

இலங்கையில் அக்காலத்தில் இவர்கள் பயனற்றவர்களாகவும், சமூகத்துக்கு மிகுந்த சுமையாகவும் எப்போதும் குடும்பத்தில் அல்லது உறவினர்களின் தயவில் வாழ வேண்டியவர்களாகவும் மிகுந்த பரிதாபத்துக்குரியவர்களாகவும் நோக்கப்பட்டனர். ஆரம்பத்தில் இவர்கள் வாழ தகுந்தவர்கள் என சிந்திக்கப்படாமையினால் கல்வி அவர்களுக்கு வழங்கப்படாத நிலையியே காணப்பட்டது. ஆனால் காலப்போக்கில் நாகரிகம் வளர்கின்றது. சிந்தனை விரிவடைகின்றது. இந்நிலையில் இவர்களை ஒன்றாக அல்லது கூட்டாக ஒரு இடத்தில் வைத்து அடிப்படை வசதிகளை வழங்கி பராமரிக்கும் நிலை உருவாகின்றது. மாற்றுத்திறனாளிகள் பராமரிக்கப்பட்ட இடத்திலேயே தமது அடிப்படைத்திறன்களை நிறைவேற்றப்பயிற்றப்படுகின்றார்கள். அவர்களுக்கான கல்விக்கு அத்திவாரம் இடப்படுகின்றது. பயிற்சிகளில் கிடைத்த வெற்றிகள் எதிர்பார்த்ததைவிட மிகுந்த பலனளித்திருந்தது. ஒவ்வொரு பாரமரிப்பு நிறுவனங்களும் தாம் பாரமரிக்கும் விசேட தேவைக்கேற்ப தமது செயற்பாடுகளை திட்டமிடுகின்றன. அதற்கு நேரமும் வகுத்துச் செயற்படுத்துகின்றனர்.

காலப்போக்கில் இவர்களைப் பாராமரித்த நிறுவனங்கள் இவர்களைப் பற்றி கற்றோரை தம்மகத்தே கொண்டு தமது செயற்பாடுகளில் உள்ள சரி பிழைகளை ஆராய்கின்றன. அவர்கள் பொதுவாக இவர்களுக்கான செயற்பாடுகளையும் ஆற்ற வேண்டிய பணிகளையும் விசேட தேவைக்கேற்ப வகுக்கின்றன. பாடசாலை முறையின் ஆரம்பத்திற்கு இதுவே அடிப்படையாக அமைந்ததெனலாம்.

இதன் போது இவர்களைப் பாராமரிக்கும் பாடசாலைகளாக மாற்றம் பெற்றுக் கொள்கின்றன. அதாவது விடுதிப் பாடசாலைகளில் இவர்கள் கற்பது பெற்றோருக்கும் மகிழ்ச்சி தரும் செயல் என அமைகின்றது. இந்நிலை அவர்களின் வெற்றியை பல மடங்கு அதிகரித்தது எனலாம். இதில் பல நன்மைகள் உள்ள ஒரு சூழ்நிலையை பெற்றோர் பெறுகின்றனர். மாணவர்களும் பெறுகின்றனர். இதனாலேயே விசேட தேவையுடையோருக்கான விடுதிப்பாடசாலைகள் தற்போதும் நிலையாக நிலைத்துள்ளன எனலாம்.

இலங்கையை பொறுத்தமட்டில் உடல் ஊனமுற்றவர்களின் கல்வி தொடர்பான சிந்தனை ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தோற்றம் பெற்றதனைக் காண முடிகின்றது. செல்வி. மேரி சாப்மன் என்பவரே இச்சிந்தனைக்கு செயல் வடிவம் கொடுத்த பெண்மணியாவார்.

இங்கு குறிப்பிடப்படும் காலங்களில் இலங்கை மேலை நாடுகளைப் பின்பற்றி முதன் முதலில் விழிப்புலன் அற்றவர்களுக்கும் செவிப்புலன் அற்றவர்களுக்குமான முதலாவது விடுதிப்பாடசாலையை 1912ஆம் ஆண்டில் இரத்மலானையில் ஆரம்பித்தது. தமிழ்ப் பிரதேசத்தினைப் பொறுத்தமட்டில் இதற்குப்பின் 1956ஆம் ஆண்டு கைதடி நவீல்ட் பாடசாலை விழிப்புலன் அற்றவர்களுக்கும், செவிப்புலன் அற்றவர்களுக்குமென ஆரம்பிக்கப்பட்டதனைக் காணலாம். இப்பாடசாலைகள் அளப்பரிய சேவையை ஆற்றியமை விசேட கல்வி வரலாறுகளில் மறக்கப்பட முடியாதன.

இவ்வாறு மாற்றுத்திறனாளிகள் தொடர்பாக மாறிவரும் அணுகுமுறைகள் என்பதனை நாம் கல்வி சீர்திருத்தங்கள், முன்னேற்றங்கள் ஊடாக நோக்குவோம். அவ்வகையில் இவை தொடர்பாக காலத்துக்குக் காலம் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நோக்குவோமாயின்,

இதன் பின் குறிப்பிடப்படும் மாற்றுத்திறனாளிகள் சார்பாக குறிக்கப்படும் சொற்கள் அந்தந்த ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட சொற்பிரயோகங்களுடன் குறிப்பிடப்படும் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அரசு தன் அணுகு முறைகளை காட்டிய விதங்களை நோக்குவோமாயின்,

1. 1914 இல் விசேட பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் சம்பளத்தில் 75வீதம் அரசு பெறுப்பேற்றுக் கொண்டது.
2. 1943 இல் கன்னங்கரா அறிக்கையில் பார்வையற்றவர்களாலும், கற்க முடியும் எனவும் இவர்களுக்கு பிரய்ல் மொழியைப் பயன்படுத்த வேண்டும் எனவும், செவிப்புலன் குன்றியோருக்கு உதட்டு வாசிப்பு முறை மூலம் கற்பிக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
3. 1961 ஜெயசூரிய அறிக்கை பூரணமான கேட்டல் திறனற்றவர்களுக்கு கேள் கருவிகள் வழங்கப்படல் வேண்டும். தீவிரமான குறைபாடு உடையவர்கள் ஒரு பாடசாலையிலும் மிதமான குறைபாடுயுடையவர்கள் வேறுறொரு பாடசாலையிலும் கல்வி கற்கலாம். பிரதேசத்தில் உள்ள குறைபாடு உடைய பிள்ளைகளின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப தனியாக பாடசாலைகள் அமைக்கப்படுதல் வேண்டும். அவையாவன.

அ. விழிப்புலன் அற்றோர் பாடசாலை

ஆ. செவிப்புலன் அற்றோர் பாடசாலை

இ. அங்கவீனர் பாடசாலை

ஈ. மந்த புத்தி உடையோருக்கான பாடசாலை இவர்களுக்கான பிரயாண வசதி, தங்குமிட வசதி என்பன வழங்கப்படல் வேண்டும். 10 மாணவர்களிற்கு ஒரு ஆசிரியர் என்ற வீதத்தில் அமைதல் வேண்டும்.

4. 1962 ஜீன் கென்மோர் அறிக்கை

இவ்அறிக்கையில் விழிப்புலனற்றோரின் கல்வி தொடர்பாகவே அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
அவையாவன.

அ. விழிப்புலனற்ற மாணவர்களை சாதாரண பாடசாலையில் இணைத்து கற்பிக்கலாம்.
ஆ. விழிப்புலனற்ற பிள்ளைகளுக்கான வேலைத்திட்டங்களினை ஒன்றிணைத்து அவர்களுக்கு உதவ வேண்டும்.
இ. ஆசிரியருக்கு விசேட பயிற்சி வழங்கப்பட வேண்டும்.
ஈ. அதிகாரிகளுக்கு அறிவூட்டுதல் வேண்டும்.
உ. பிள்ளைகளுக்கு உபகரணங்கள், புத்தகங்கள் வழங்கல் வேண்டும்.
ஊ. நீண்ட காலத்திற்கு இந்த வேலைத்திட்டங்களை கொண்டு நடத்துதல் வேண்டும்.
எ. இவர்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

5. 1967ஆம் ஆண்டில் வித்தியோதய பல்கலைக்கழகத்தில் விசேட கல்வி தொடர்பான பட்டப்பின் படிப்பு பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.

6. 1968ஆம் ஆண்டு விழிப்புலனற்ற 17 மாணவர்கள் சாதாரண பாடசாலையில் கல்வி பயில விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

7. 1769இல் அமைச்சரவை அறிக்கை இலக்கம் 225இல் குறைபாடுள்ள பிள்ளைகளிற்கு சாதரண பாடசாலையில் கல்வி பயிற்றும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

8. 1970இல் மகரகம ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் விழிப்புலனற்ற மாணவர்களின் கல்வி தொடர்பான ஓராண்டு பயிற்சி நெறி ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டது.

9. 1971இல் கல்வி அமைச்சில் விசேடகல்விப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

10. 1972ஆம் ஆண்டு இலங்கை ஒருமுகப்படுத்தப்பட்ட அல்லது ஒன்றிணைந்த கல்வித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் உடல் ஊனமுற்ற மாணவர்கள் சாதாரண பாடசாலைகளில் சாதாரணமாணவர்களோடு இணைந்து கல்விகற்க வாய்ப்பு கிட்டியது.

11. 1976இல் உளக்குறைபாடுயுடைய பிள்ளைகளிற்கு கற்பதற்கான பட்டதாரி ஆசிரியர்களுக்கான விசேட டிப்ளோமா கற்கைநெறி கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

12. 1979இல் போகொட பிரேம ரட்ன அறிக்கை வெளிவந்தது. இதில் விசேடகல்வி தொடர்பாகவும் மீத்திறனுடைய மாணவர்களின் கல்வி தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதோடு விசேடகல்வி என்றால் என்ன என்பது பற்றியும் விசேட கல்வி தொடர்பான ஸ்தாபனங்கள் எவ்வாறு தமது கடமைகளை ஆற்ற வேண்டும். என்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

13. 1981 கல்வி வெள்ளை அறிக்கை இதில் விசேடகல்வி தொடர்பான அதிகாரிகளின் கடமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

14. 1985இல் உளக்குறைபாடு உள்ள பிள்ளைகளிற்கு கற்பிப்பதற்கு மகரகம ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான விசேட டிப்ளோமா பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் உளக்குறைபாடுடையோருக்கான விசேட டிப்ளோமா பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டிலேயே மகரகமவில் பிரயில் அச்சகம் ஆரம்பிக்கப்பட்டதும் ஒரு முக்கியமான விடயமாகும்.

15. 1988ஆம் ஆண்டு தேசியகல்வி நிறுவகத்தில் விசேடகல்விக்கென தனியாக ஒரு அலகு ஆரம்பிக்கப்பட்டது.

16. 1994ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் உள்ள சகமென்கார் எனும் இடத்தில் நடைபெற்ற விசேடகல்வி தொடர்பாக முக்கியமான மாநாட்டில் இலங்கையும் கைசாத்திட்டது.

17. 1997 புதிய கல்விச் சீர்திருத்தம் பொதுக்கல்விச் சீர்திருத்தம் 1997 எனும் தலைப்பில் பொதுக்கல்விக்குரிய ஜனாதிபதியின் துரித செயற்குழு வெளியிட்ட அறிக்கை புத்தகத்தில் 11வது விடயம் சிறப்புகல்வி பற்றியது ஆகும். இங்கு "விசேட கல்வி" என்பது சிறப்புகல்வி என மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை கவனிக்கப்பட வேண்டியதாகும். உளசமூகம் சார்ந்த குறைபாடுகளினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளிற்கு உதவும் அணுகு முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கட்டுரையில் "தற்காலம்" என நாம் குறிப்பிட இருப்பது இலங்கை உட்படுத்தல் கல்வி முறையினை ஏற்றுக்கொண்டு சலமன்கார் எனும் இடத்தில் நடைபெற்ற மாநாட்டில் கையெழுத்திட்ட 1994இல் பிற்பட்ட காலமாகும். இது விசேடதேவையுடையோர் மற்றவருக்கு சமமான தன்மை பெறும்காலம் என நாம் குறிப்பிடலாம்.

இதன் பின் நாம் எமது தேவைக்காக விசேடதேவையுடையோரை பல்வேறு வகையாக வகைப்படுத்தினாலும் கல்வி ரீதியாக 13 வகைக்குள் நோக்குவோம்.

1. மீத்திறன் உடையோரும் விசேட நிபுணத்துவம் உடையோரும்.
2. கற்றல் இயலாமை உடையோர்(StudentWith Learning disabilities)
3. மொழிதலும் மொழிக்குறைபாடுயுடையோர் (Speech and language impairment)
4. மொதுவான உளவளர்ச்சி உடையோர் (Mentaly retarded)
5. உக்கிர மனவெழுச்சி பிரச்சனை (Sever emotional disturbance)
6. பல்வகை இயலாமையுடையோர் (Multiple disabilities)
7. உடலியற் குறைபாடுகள் (Physical impairments)
8. சுகாதாரக் குறைபாடுகள் (Helth impaiements)
9. கேட்டல் குறைபாடு (Hear inhimpairmrnt)
10. பார்வைக் குறைபாடுடையோர் (Visual impairments)
11. பூரணமானபார்வைக் குறைபாடுடையோரும் கேட்டல் குறைபாடுடையோரும்.(totally deafness and totally blindness)
12. தற்சிந்தனை (Autism)
13. மூளையில் ஏற்படும் பாதிப்பு (brain injury)

இவர்கள் அனைவரையும் உள்ளடக்கியே விசேடதேவையுடையோர் என்பர். அண்மைக்காலத்தில் மாற்றுத்திறனுடையோர், மாற்றாற்றல் உள்ளோர் என்ற சொற்பிரயோகங்களினையும் பயன்படுத்தி வருகின்றோம். இவ்வாறாக இலங்கையில் விசேடகல்வித்துறையானது. வளர்ச்சி கண்டு வருகின்றதினை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

## 11. வெள்ளைப்பிரம்பு ஒரு பார்வை

நா.கீதரிருஸ்ணன்



வருடந்தோறும் ஒக்ரோபர் மாதம் 15ம் திகதி வெள்ளைப்பிரம்பு பாதுகாப்புத்தினம் எனச் சர்வதேச ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டு நினைவு கூறப்படுகின்றது. இவ் வெள்ளைப்பிரம்பின் முக்கியத்துவத்தை மக்கள் அனைவரும் அறிந்து கொள்ள உதவியாக இத்தினம் விளங்குகின்றது. பொதுவாக பார்வையற்ற அல்லது பார்வை குறைபாடுடையவர்கள் கையில் ஒரு வெள்ளைப்பிரம்பை தாங்கியிருப்பதையும் அதன் துணையுடன் நடந்து செல்வதையும் நீங்கள் கண்டிருப்பீர்கள். பலருக்கு இது வித்தியாசமான அனுபவமாகவோ அல்லது புரியாத புதிராகவோ இக்காட்சி இருக்கலாம். அத்துடன் இதனைக் காணும் சிலர் அப்பிரம்பில் உள்ள ஏதோ ஒரு சக்தி அவர்களுக்கு வழிகாட்டி உதவி புரிவதன் மூலம் அவர்கள் சுயமாக தம்வழி நடந்து செல்கிறார்கள் என நம்பவும் கூடும். தவிர இவ்வெள்ளைப்பிரம்பு தொடர்பான அறிவைபெற்றவர்களும் இருக்கவே செய்கிறார்கள். எது எப்படி இருப்பினும் இவ்வெள்ளைப்பிரம்பு பற்றிய அறிவை பொதுமக்கள் பெற்றிருத்தல் சமூக வாழ்க்கைக்கு ஒரு ஆரோக்கியமான நிலையை உருவாக்கும்.

வெள்ளைப்பிரம்பின் பயன்பாடு அதனுடைய அமைப்பு வெள்ளைப்பிரம்பின் அவசியத் தன்மை போன்ற விடயங்களை தெரிந்து கொள்வதற்கு அதன் வரலாற்றையும் பல்வேறு நாடுகளினால் வெள்ளைப்பிரம்பு தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் விளங்கிக்கொள்ளுதல் உதவிகரமானதாக அமையும்.

மிகப்பழைய காலத்திலிருந்தே சாதாரணமாக ஒரு தண்டு அல்லது தடியை வீதியில் செல்பவர்கள் தம்முடன் கொண்டு செல்வதை வழக்கமாகவே கொண்டிருந்தார்கள். அதில் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு நோக்கமே பிரதானமாக இருந்தது. மேலும் விவசாயிகள் விலங்குகளை விரட்டவும் மந்தை மேய்ப்போர் அவற்றைக் கட்டுப்படுத்தவும் பல்வேறு அளவுகளிலான ஒரு தடியைத் தம்முடன் வைத்திருப்பவர்கள். அன்றைய காலகட்டத்தில் அந்தத்தடிகள் மிகப்பெரிய உதவு கருவியாக மாறும் என்பதை நினைத்திருக்கக்கூடமாட்டார்கள். ஆனால் அதுவே இன்று சிறுசிறு மாற்றம் பெற்று பார்வையற்றோருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. கைத்தடிகளைப் பொறுத்தளவில் அது ஒரு கௌரவத்திற்காக வைத்திருக்கப்படும் ஒன்றாகவும் இருந்துள்ளது. தேசங்களின் தலைவர்கள் கூட கைத்தடிகளை அன்பளிப்பாகப் பெற்றுள்ளார்கள். கைத்தடிகளின் பாவனையே வெள்ளைப்பிரம்பின் தோற்றத்திற்கு ஒரு அடித்தளமாக இருந்துள்ளது. எப்படி? வரலாற்றைப் பார்ப்போம்.

இரண்டு உலகமகாயுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலமே வெள்ளைப்பிரம்பின் தோற்றத்திற்கு மூலகாரணமாக இருந்தது. இக்காலப்பகுதியிலேயே வெள்ளைப்பிரம்பினை உபயோகிப்பவர்கள் பார்வையற்றவர்கள் அல்லது பார்வை குறைபாடுள்ளவர்கள் என மற்றவர்களால் அடையாளப்படுத்தப்பட்டன.

இவ்வெள்ளைப்பிரம்பின் ஆரம்பக் கண்டுபிடிப்புக்கு 1921இல் பிரிட்டனில் பிறிஸ்டல் நகரத்தில் வாழ்ந்த ஜேம்ஸ் பிக் என்பவரே உரித்துடையவராக கருதப்பட்டார். ஒரு புகைப்படத்துறை நிபுணராக இருந்த இவர் ஒரு வாகன விபத்து காரணமாக தனது பார்வையை இழந்தவர். தனது சூழலை மாற்றி அமைக்க வேண்டிய நிலையில் தனது சுயேட்சையான நடமாட்டத்திற்கு தனது கைப்பிரம்பையே உபயோகித்தார். ஆனால் அதிகரித்து வந்த வாகனப் போக்குவரத்தினால் அச்சமடைந்த அவர் வாகன ஓட்டிகள் சுலபமாக அடையாளம் கண்டு கொள்ள ஏதுவாகத் தனது பிரம்புக்கு வெள்ளை வர்ணம் பூசி வெள்ளைப் பிரம்பாக்கினார். எனினும் பின் வந்த ஒரு தசாப்த காலத்துக்குள் இது பற்றிய மேலதிக தகவல்கள் பரவியதாகத் தெரியவில்லை. ஆயினும் 1931 பெப்ரவரியில் பார்வையற்றவர்களுக்காக பல தொண்டுகள் புரிந்த பிரான்ஸ் தேசத்து அம்மையாரான கில்லி டி.ஹேபமொன்ற்(Guilly D.Hearbomont) என்பவர் வெள்ளைப் பிரம்பு தொடர்பான பல பிரசாரங்களை தேசியளவில் முன்னெடுத்து வந்தார். இவ்விடயம் பிரிட்டன் நாளேடுகள் மூலமாகவும் அந்நாட்டு ரோட்டரிக் கழகங்களால் நாடு முழுவதும் இது பற்றி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. 1931 மே மாதத்தில் பி.பி.சி. ஒலிபரப்பு நிறுவனம் இப்பிரசாரத்தில் இணைந்து பார்வையற்றவர்களுக்கு வெள்ளைப்பிரம்பு கொடுக்கப்பட வேண்டும். எனவும் இது உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்படுவதுடன் அதனைக் கையாள்பவர் பார்வைக்குறைபாடு உள்ளவர் என்பதை இப்பிரம்பு அடையாளம் காட்டும் எனவும் முன்மொழிந்தது. எனினும் இதற்கு முன்னரே 1930இல் ஐக்கிய

அமெரிக்காவிலுள்ள சர்வதேச அரிமாச் சங்கம் பார்வையற்றவர்களின் நடமாட்டத்தை அவதானித்து இவ்வெள்ளைப்பிரம்பின் அறிமுகத்தை அங்கு ஏற்படுத்தியது. தேசிய அளவில் இதற்கான நடவடிக்கைகளை இது முன்னெடுத்ததுடன் பிரம்புகளுக்கு வெள்ளை நிறமூட்டிக் கொடுக்கும் பணியையும் மேற்கொண்டது. ஆரம்பத்தில் இப் பிரம்பினை ஒரே நிலையாக தம்முன் சாய்நிலையில் வைத்துக் கொண்டே பார்வையற்றவர்கள் நடமாடினார்கள். இரண்டாம் உலகப் போரில் போது பார்வையை இழந்து நாடு திரும்பிய அமெரிக்கர்களின் விருப்புக்கேற்ப அவர்கள் மற்றயவர்களுடன் இயல்பான வழிகளில் பழகுவதற்கும் பங்கேற்பதற்கும் வசதியாக டாக்டர் றிச்சேட்ஹுவர் என்பவர்(Dr. Righard Hoover) நீளமான பிரம்பு அல்லது ஹுவர் முறை(Hoover Mathod) என்றழைக்கப்பட்ட வெள்ளைப் பிரம்புகள் உருவாக உதவினார். இவ்வாறு பல வழிகளாலும் இதன் முக்கியத்துவம் உணரப்பட்டதையடுத்து இவ்விடயம் அரசாங்கங்களின் கவனத்தை ஈர்த்தது.

அமெரிக்காவின் இலினொயிஸ் மாநிலத்திலுள்ள பெயோறியாவில் 1930 டிசம்பரில் முதலாவது வெள்ளைப்பிரம்ப பாதுகாப்பு பிரகடனம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் பார்வையற்றவர்களுக்கு வீதியில் நடமாடும் சுகந்திரமும் பாதை உரித்தும் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல மாநிலங்களில் இப்பணி பரவியது. இறுதியாக 1960ஆம் ஆண்டு பார்வையற்றவர்களுக்குச் சேவையும் உதவியும் புரியும் பல நிறுவனங்கள் அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு ஒக்ரோபர் 15ஆம் திகதியை வெள்ளைப் பிரம்பு பாதுகாப்புதினம் என தீர்மானம் நிறைவேற்ற ஆலோசனை கூறின. இத் தீர்மானம் 1964ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அமெரிக்காவில் இரு மன்றங்களினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து ஜனாதிபதி லிண்டன் பி. ஜோன்சனினால் Lyndon B. Johnson ஒக்ரோபர் 15ம் திகதி வெள்ளைப்பிரம்பு பாதுகாப்புதினம் என பிரகடனம் செய்யப்பட்டது.

சர்வதேச விழிப்புலனற்றோர் கூட்டமைப்பு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை என்ற ரீதியில் மகாநாடுகளை நடத்தி வருகின்றது. இவ்வகையில் அதன் முதலாவது மாநாடு கொழும்பு நகரில் 1969ஆம் ஆண்டு ஒக்ரோபர் 4ம் திகதி இடம்பெற்றது. அந்த மகாநாட்டில் அதன் அப்போதைய தலைவரால் முதன்முறையாக 1970 ஒக்ரோபர் 15ஆம் திகதியை தொடக்கமாகக் கொண்டு ஆண்டுதோறும் அத்திகதியை சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினமாக கொண்டாப் பிரகடனப் படுத்தப்பட்டது. இதன் பின்பு வருடா வருடம் ஒக்ரோபர் 15ஆம் திகதி வெள்ளைப்பிரம்பு தினமாக சகல நாடுகளிலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

இவ்வெள்ளைப் பிரம்பானது எவ்வகையில் பார்வையற்றவர்களுக்கு உதவுகிறது என்பது பற்றி சிறிது நோக்குதல் பொருந்தும், பொதுவாக பார்வையற்றவருக்கு முன்னே இருக்கும் பொருட்களை மெதுவாக தடவியோ அல்லது தட்டியோ அறிய இவ்வெள்ளைப் பிரம்பு உதவும் மேலும் இதனை ஒரு ஊன்றுகோலாக நினைத்தல் கூடாது. கடினமான தடி சில வேளைகளில் எதிரிலிருக்கும் பொருளைக் காயப்படுத்தி விடவும் கூடும். இதனாலேயே ஆய்வுகளின் பின் கனதி குறைந்த மூங்கில், பிளாஸ்டிக் ஆகியவை கொண்டு இதனை தயாரித்தார்கள். அனேகமான இன்றைய பாவனையில் உள்ளவை தேவையான நேரங்களில் உபயோகித்த பின் மடித்து வைத்துக் கொள்ளக்கூடியதான முறையில் தயாரிக்கப்படுகின்றன. அத்துடன் அதன் நுனியில் ரப்பரிலான ஒரு குமிழ் பொருத்தப்படுகிறது. உபயோகிப்பவர்கள் தங்கள் உயரத்திற்கேற்ப வெள்ளைபிரம்பை பாவிக்கலாம். இதன் மூலம் பார்வையாளர்கள் இரண்டு காலடி தூரத்திற்கு தமக்கு முன்னால் இருக்கும் பரப்பை அவதானத்துக்குள் கொண்டுவர முடியும். ஒருவருக்குத் தேவையான வெள்ளைப்பிரம்பின் நீளத்தை தீர்மானிப்பதற்கு அவரின் உயரத்தை அங்குலத்தில் அளந்து (தேவையான இடத்து காலணியுடன் சேர்த்து) அதன் பாதியளவுடன் அரை அங்குலத்தைக் கூட்டி எடுக்கும் அளவையே, இவற்றைத் தயாரிக்கும் நிறுவனங்கள் வெள்ளைப்பிரம்பை தயாரிக்க கைக்கொள்கின்றன. மேலும் வெள்ளைபிரம்பை உபயோகிக்கும் பார்வையற்றவர்கள் படிகளில் எறிஇறங்கும் போது சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என கூறப்படுகின்றது. சகல மனிதருக்கும் ஒரு கால் பலமுடையதாகவும் மற்றையது சற்றுப் பலம் குறைந்தும் இருக்கும். இதனால் இவர்கள் படிகளில் ஏறும்போது வெள்ளைப்பிரம்பை மேற்படியில் வைத்து முதலில் தமது பலமற்ற காலை வைத்து ஏற வேண்டும். எனவும் இறங்கும்

போது பிரம்பைக் கீழ்ப்படியில் வைத்து பலமான காலை முதலில் வைக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

எனவே இதனை உபயோகிக்கும் பார்வையற்றவர்கள் உடனடியாகவே இதன் பயனைப் பெறுவதில்லை. அவர்கள் இதன் பாவனைமுறைகளை பயிற்சி செய்த பின்பே அவர்களால் முழு அளவிலான பயனைப் பெற முடியும். உதாரணமாக இவர்கள் வீதியில் நடந்து செல்லும் போது விதியின் அகலப்பக்கம் முடியும் ஓரத்தில் நடந்து செல்வார்கள். தமது வெள்ளைப்பிரம்பின் உதவியுடன் முன்புறம் தட்டிப் பார்த்து அதன் ஒலி அதிர்வின் மூலம் வீதி எது, ஓரம் எது என்பவற்றை அறிந்து கொள்வார்கள். 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 15ஆம் திகதி அமெரிக்காவில் இவ்வெள்ளைப்பிரம்பு தின நினைவு விழாவில் அன்றைய ஜனாதிபதி பில் கிளின்டன் இந்நினைவு தினத்தை மீண்டும் வலியுறுத்திப் பின்வருமாறு கூறினார். இவ்வெள்ளைப்பிரம்பைப் பாவிப்பவர்கள் தக்க பயிற்சி பெறும் நிலையில் தமது நடமாட்டத்தையும் பாதுகாப்பையும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இதன் துணையுடன் தமது பாதையில் இருக்கக் கூடிய வளைவுகள், படிகள், ஏற்ற இறக்கமான நடைபாதைகள் மற்றும் பௌதிகப் பொருள்கள் போன்ற தடைகளைச் சுலபமாக அறிய முடியும். இவ்வெள்ளைப்பிரம்பு அவர்கள் தமது பாடசாலைக்கோ அல்லது வேலைத்தளத்திற்கோ செல்வதற்கும் தமது சமூக, சமுதாய நிகழ்ச்சிகளில் ஏனையவர்களுடன் கலந்து கொள்ளவும் அவர்களுக்கு சுகந்திரத்தையும் பிறர் துணையின் தேவையின்மையையும் கொடுக்கிறது. ஆனால் இவர்களுக்கு இருக்கும் ஒரு தடை எதுவெனில் ஏனையவர்களால் இவர்கள் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதும் இவர்கள் வாழ்க்கை தடத்தில் எமது சமுதாயம் வைத்துள்ள நடைமுறைகளுமே. 2001 ஆம் ஆண்டில் இத்தினத்தை நாம் கொண்டாடும் போதும் இவ்வெள்ளைப்பிரம்பின் வரலாற்றை ஓர் கருவியாக மட்டுமல்லாது ஒரு அடையாளச் சின்னமாக அதாவது சுகந்திரத்திற்கான ஒன்றாக நினைவுகூர்வது மட்டுமல்லாது ஒக்ரோபர் 15ஆம் திகதியை வெள்ளைப்பிரம்பு தினமாகக் கொண்டாடுவதற்கு அடித்தளமிட்ட சம்பவங்களையும் நாம் நினைவிற் கொள்வோமாக.

இப்படி கடந்த பல ஆண்டுகளாகவே வெள்ளைப்பிரம்பின் வரலாறு அதன் பாவனை முறை விளக்கங்களும் உலகளாவிய ரீதியில் கவனிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றது. பார்வையற்றவர்களில் பெரும்பான்மையானவருக்கு இந்த ஒரு குறைபாட்டைத் தவிர வேறு எந்த உடற், உளக்குறையும் இருப்பதில்லை என்ற நிலையில் அவர்களால் சமூகத்தில் எவ்வளவோ செய்ய முடியும். செய்தும் வருகிறார்கள். எனவே அவர்கள் சமுதாயத்திற்குள் முழு அளவில் உள்வாங்கப்படுதல் அவசியமானது. இன்றைய அறிவியல் வளர்ச்சி அவர்களின் செயற்பாட்டை முன்னேற்ற பல கண்டுபிடிப்புக்களைச் செய்த வண்ணமே இருக்கிறது. உதாரணத்திற்கு இலத்திரனியல் தொழிற்பாட்டின் உதவியுடன் உணர்திறன்யுடையதும், ஒலி எழுப்பக் கூடியதுமான வெள்ளைப் பிரம்புகள் பாவனைக்கு வந்துள்ளன. இதனை மக்கள் நன்குணர்ந்து அவர்களை தம்முடன் இணைந்தவர்களாக நினைத்துச் செயற்படுதல் மிக நன்மையளிக்கும்.

பார்வையற்றோர் விடயத்தில் இவ்வெள்ளைப்பிரம்பு வைத்திருப்பவர் ஒருவர் அரச சட்டங்களின் மூலம் பாதுகாக்கப்படுகின்றனர். இதற்கெனவே சட்டங்கள் பல நாடுகளாலும் இயற்றப்பட்டுள்ளன. சிலதேசங்களில் வெள்ளைப்பிரம்புக்குப் பதிலாக பயிற்றப்பட்ட நாய்களையும் உபயோகிக்கலாம் என உள்ளது. இதற்காக பயிற்றப்பட்ட நாய்களே பாவிக்கப்படுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எப்படி எனில் பொதுவான சில சட்டங்கள் எல்லா நாடுகளிலும் பார்வையற்றோருக்கு சில உரிமைகளையும் பாதுகாப்பையும் வழங்குகின்றன.

அவற்றில் முக்கியமானவை.

1. வெள்ளைப்பிரம்பு தாங்கிய பார்வையற்றவர் ஒருவர் பொது கட்டங்கள், காரியாலயங்கள் போன்றவற்றினுள்ளும், ஆகாயவிமானம் ஏனைய போக்குவரத்து சாதனங்களிலும் அப்பிரம்புடன் பிரவேசிக்க அனுமதியுண்டு.
2. வீதியில் செல்லும் போது எந்த பொதுப்போக்குவரத்து வாகனத்தையும் எவ்விடத்தும் மறிக்க உரிமையுடையவர்.
3. நிறுத்தப்படும் வாகனத்தில் சாத்தியக்கூறு இருக்கும் பட்சத்தில் பயணிக்க முடியும்.
4. வீதி நடமாட்டத்தில் குறிப்பாக பாதையைக் கடத்தலில் முன்னுரிமை வழங்கப்படும்.

5. சன சந்தடியான இடத்தினூடாக நடமாடும் போது மற்றவர்கள் இடமளித்தல் வேண்டும்.

வெள்ளைப்பிரம்ப ஒரு சட்ட பூர்வமான எல்லைக்குள் இருப்பதாகும். பார்வையற்றோர் தவிர ஏனையவர்கள் வெள்ளைப்பிரம்பு உபயோகிப்பது குற்றம் என்ற சட்டமும் சில நாடுகளில் உள்ளது.

ஒரு பார்வையற்றவரின் விடயத்தில் வெள்ளைப்பிரம்பானது எத்தனை முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது என்பது மேற்கூறிய கட்டுரைப் பகுதியிலிருந்து எம்மால் ஓரளவு அறிய முடியும். அது அவர்களின் சுகந்திரத்திற்கான சின்னம் அதனை வைத்திருப்போர் பார்வையற்றவர்கள் என்பதை அது அடையாளம் காட்டிவிடும் என்ற இரு கவனிப்புகளை மட்டுமாவது ஏனையவர்கள் அறிந்திருக்க வேண்டும். ஆயினும் இவற்றின் பின்னணியில் எத்தனையோ அமைப்புகளும் அரசாங்கங்களும் ஏன் தனி நபர்களும் இருந்து வெள்ளைப் பிரம்பின் பாவனையும் அதன் முக்கிய இடத்தையும் வலியுறுத்தியுள்ளனர்.

எனவே வெள்ளைப்பிரம்பு தாங்கிய ஒருவரை நாம் சந்திருக்கும் போது அவரின் மேல் எவ்வித வித்தியாசமும் பாரபட்சமும் காட்ட வேண்டிய தேவையில்லை. அத்துடன் மனித மாண்பு அடிப்படையில் அவர் வேண்டும் உதவியை எம்மால் முடிந்தளவிற்கு செய்தல் வேண்டும். உதாரணமாக ஒரு சனசந்தடியான இடத்தின் ஊடே வெள்ளைப்பிரம்பு தாங்கிய ஒருவரை காணுமிடத்து அவர் வழியில் நாம் ஓர் தடையாக இருக்காமல் விடுவது கூட அவருக்கு நாம் செய்யும் உதவியாகும்.

ஒக்ரோபர் 15ஆம் திகதி வெள்ளைப்பிரம்பு தினம் என்பது பார்வையற்றவர்களுக்காக மட்டுமல்ல எமது சகமனிதர்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்பதை ஏனைய மக்களும் நினைவிருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் தான். ஆதலால் இத்தினத்தில் அவர்களுடன் இணைந்து அனைவரும் சேர்ந்து அனுஷ்டிப்பதன் மூலமாக அவர்களை உற்சாகப்படுத்துவது மட்டுமன்றி எமது மனத்திலும் அவர்கள் நினைவை உறுதியாக்கிக்கொள்ள முடியும்.